விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 27 செவ்வாய்க்கிழமை (10.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 82

## பௌத்த பிக்குகள்
# அரசியலில் ஈடுபடுவதால் நாடு எந்தப் பயனையும் அடையாது


(கோப்புப்படம்)

### மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)
பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதால் நாடு எந்தப் பயனையும் அடையாது என இலங்கையின் முக்கிய பௌத்த பீடங்களான மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## 15 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது

(கொழும்பு)
எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரையில் 15 சுயேட்சைக்குழுக்கள் 23

## திருட்டு குற்றச்சாட்டு யாழில் இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் வீட்டை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் இருவர் நேற்று அதிகாலை யாழ்ப்பாணப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.
கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 2 லட்சம் 23

## சர்வதேச ரீதியில் கொரோனா அச்சம்
# வெளிநாடுகளுக்கான பயணத்தை முடிந்தவரை இரத்துச் செய்யுங்கள்
### சுகாதார அமைச்சு கோரிக்கை

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொடர்பில் சர்வதேச ரீதியில் காணப்படும் அச்சுறுத்தலை கவனத்தில் கொண்டு வெளிநாடுகளுக்கான பயணத்தை முடிந்தவரை இரத்து செய்யுமாறு சுகாதார அமைச்சு பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.
கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் சுகாதார சேவைகள் 23

# 18 பவுண் நகை நாவற்குழியில் திருட்டு
### வீட்டில் யாரும் இல்லாத நிலையில் பட்டப்பகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
நாவற்குழிப் பகுதியில் நேற்றுப் பட்டப்பகலில் வீட்டில் இருந்த 18 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் 16ஆயிரம் ரூபாய் பணம் என்பன திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது. திருட்டுச்சம்பவம் நாவற்குழி சித்திவிநாய 23

# பட்டப்பகலில் திருட்டு கொள்ளையன் மடக்கிப்பிடிப்பு
### குப்பிழானில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ். குப்பிழான் தெற்குப் பகுதியில் வீட்டிலிருந்தவர்கள் மரண வீட்டுக்குச் சென்ற சமயம் பார்த்து வீட்டின் மதிலேறிப் பாய்ந்து கொள்ளையில் ஈடுபட்ட திருடனொருவன் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளான். மற்றைய கொள்ளையன் தப்பிச் சென்றுள்ளான்.
குறித்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம் பெற்றது. மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,
குறித்த வீட்டிலிருந்தவர்கள் குப்பிழான் வடக்கிலுள்ள மரண வீட்டிற்குச் சென்ற சமயம் பார்த்து நேற்றுப் பிற்பகல் 5.00 மணியளவில் இரண்டு கொள்ளையர்கள் வீட்டின் மதிலேறிப் பாய்ந்து அங்கு திருட்டில் ஈடுபட்டுத் தப்பிச் செல்ல முயன்றுள்ளனர்.
இந்நிலையில் குறித்த வீட்டுக்கு அயலில் வசித்து வரும் குடும்பஸ்தரொருவர் மேற்படி வீட்டில் கொள்ளையில் ஈடுபட்டு விட்டுத் தப்பிச் செல்ல முயன்ற கொள்ளையர்களிடம் விசாரித்த போது கொள்ளையர்களில் ஒருவன் மழுப்பலாகப் பதிலளித்து விட்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றுள்ளான்.
இந்நிலையில் குறித்த குடும்பஸ்தர் திருடன்...திருடன்...என உரத்துக் கத்தியவாறு 23

# இரு குழுக்களிடையே கொழும்புத்துறையில் மோதல்
### ஐவர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியில் இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் ஐந்து பேர் வாள்வெட்டுக்கிலக்காகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3.10)

# இலங்கையர்கள் நுழைவதற்கு
### கட்டார் தடை

(கொழும்பு)
இலங்கை உள்ளிட்ட 14 நாடுகளில் இருந்து வரும் பயணிகள், நேற்று தொடக்கம் தமது நாட்டுக்குள் நுழைவதற்கு கட்டார் அரசு இடைகாலத் தடை விதித்துள்ளது. 23

# ரணில் எங்களை ஏமாற்றியுள்ளார்
### யாழில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)
ரணில் உங்களை ஏமாற்றினாரா என இப்பொழுது கேட்கிறார்கள். என்னுடைய மனைவி இங்கு இருக்கிறார்.
அவர் அடிக்கடி எனக்கு சொல்கிறார், ஆரம்பத்திலிருந்தே உங்களை ஏமாற்றுவது என தீர்மானித்து தான் ரணில் அனைத்தையும் செய்தார். 23

## இணைய மோசடிகள் அதிகரிப்பு
# பேஸ்புக்கில் படங்களை பதிவிட வேண்டாம்!
### பெண்களுக்கு எச்சரிக்கை 23

## வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கு
# 14 நாட்கள் வீட்டுச் சிறை

(கொழும்பு)
இத்தாலி, தென் கொரியா மற்றும் ஈரான் ஆகிய மூன்று நாடுகளை தவிர்ந்து, ஏனைய நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தருபவர்கள் 14 நாட்கள் தங்களது வீடுகளிலேயே தங்கியிருந்து, சுய கண்காணிப்புக்கு உட்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் வகையிலேயே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். (ம-3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலை ஆங்கில மொழிக் கற்பித்தல்
பேராசிரியையாக

**சண்முகயோகினி** அவர்கள்

நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு எம் மனமார்ந்த
வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

**யாழ்.பல்கலை இணையவழி,**
**வியாபார முகாமைத்துவமாணி 2017 மாணவர்கள் (முதலாம் ஆண்டு)**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## மணிவிழா வாழ்த்துக்கள்



அருட்சகோதரி
**மரியஜீவந்தி [அ.கா]**

இன்று (10.03.2020)
அகவை அறுபதை
அடையும்
யா/அச்சுவேலி புனித
தெரேசா மகளிர் கல்லூரி
அதிபர் அருட்சகோதரி
**மரியஜீவந்தி (அ.கா)**
அவர்களை
வாழ்த்துகின்றோம்.

**அதிபர் சங்கமும்**
**கோட்டக்கல்விப்பணிப்பாளரும்**
**கோப்பாய்க் கல்விக்கோட்டமும்**

(2548)

**கிளிநொச்சி**

## அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

**கணக்காய்வு அறிக்கை 01.01.2019**
**முதல் 31.12.2019 வரை**

*அன்பான முருகன் அடியார்களே!*

எமது ஆலயத்தின் கணக்கறிக்கை அடியார்களின் பார்வைக்காக காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய அல்லது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமான தங்களின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் எழுத்து மூலம் 2020.03.24ஆம் திகதிக்கு முன் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.

நன்றி

**ஆலய பரிபாலன சபையினர்**
**0212283745**

(C-9454)

# மரண அறிவித்தல்



## இசக்கிமுத்து இராஜேந்திரன்

**(கொழும்பண்ணன்)**

**உரிமையாளர் - E.R.TRANSPORT**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29.10.1954 | 09.03.2020 |

கொழும்பை பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இசக்கிமுத்து இராஜேந்திரன் அவர்கள் நேற்று (09.03.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இசக்கிமுத்து - கிருஷ்ணவேணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - இராசம்மா தம்பதியினரின் மருமகனும் ரஞ்சிதத்தின் பாசமிகு கணவரும் இராஜமனோகரி, விஜயகுமார், இராஜ் மோகன், இராஜபிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயகாந்தன், தர்சினி, ஜீவிதா, கிரிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுலக்ஷன், லக்ஷிகா, தனுஜ், சுபீட்ஷா, கேசியா, ஸ்ரீஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் காந்திமதி, மகேந்திரன், காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் சரஸ்வதி, லட்சுமணன், மகேஸ்வரி, கதிரேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:- குடும்பத்தினர்
0774893391, 0779729446, 0777280936

(C-9461)


“கலப்பு பொறிமுறை வெறும் கண்துடைப்பு”

# இலங்கை அரசிற்கு எதிராக சர்வதேச விசாரணை!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனயீர்ப்புப் பேரணியும் போராட்டமும்

(கொழும்பு)

**இலங்கை அரசிற்கு எதிராக சர்வதேச விசாரணையை நடத்து வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை வலியுறுத்தி மட்டக்களப்பில் மாபெரும் கவனயீர்ப்புப் பேரணியும் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. வடக்கு-கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.**








மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் ஆரம்பமாகிய பேரணி, பிரதான வீதியூடாக காந்திபூங்கா வரையில் சென்று அங்கு கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும், உள்ளக விசாரணையை நிராகரிக்கின்றோம், காணாமல் போனோருக்கான அலுவலகத்தை நிராகரிக்கின்றோம்,

காணாமல் போனோரை கண்டறிய சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும், சர்வதேச விசாரணையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டும், கலப்பு பொறிமுறை வெறும் கண்துடைப்பு எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.


இதன்போது தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் 43ஆவது மனித உரிமை பேரவைக்கு அனுப்புவதற்கான மகஜர் ஒன்றும் வடக்கு-கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அமைப்பால் வாசிக்கப்பட்டது.

காணாமல்போனவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருவதாகவும் தமிழ்த் தலைமைகளும் தங்களை ஏமாற்றியதாகவும் இங்கு காணாமல்போனவர்களின் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கவனயீர்ப்புப் பேரணி மற்றும் போராட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் இருந்தும் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (இ-7)

# நாட்டின் சுதந்திரம் என்பது சிங்கள மக்களுக்கு மட்டும் தானா?

## நீதி கோரி யாழில் போராட்டம்






(படங்கள்:நிக்சன்)









வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி யாழ்.சங்கிலியன் பூங்கா முன் நேற்றுக் காலை கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. (இ-7)

# ஹீலியின் ஆட்டத்தை ரசித்துப் பார்த்த கணவர் மிச்செல் ஸ்டாக்

அவுஸ்திரேலியாவிற்கு மகளிர் உலக கிண்ணத்தை வென்று கொடுத்துள்ள அலீசா ஹீலி தனது குடும்பத்தின் சாதனைகளை தொடர்ந்துள்ளார்.

இந்தியாவிற்கு எதிரான இறுதிப்போட்டியில் 39 போட்டிகளில் 75 ஓட்டங்களை பெற்று அவுஸ்திரேலியாவிற்கு அதிரடி ஆரம்பத்தை வழங்கினார் ஹீலி.

சர்வதேச மகளிர் தினத்தன்று மெல்பேர்ன் மைதானத்தில் திரண்டிருந்த 80,000ற்கும் அதிகமான ரசிகர்கள் மத்தியில் அவர் இந்த வாணவேடிக்கையை நிகழ்த்தினார்.

அவரது கணவரான அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்ச்செல் ஸ்டார்க்கும் அந்த பார்வையாளர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மிச்செல் ஸ்டாரக் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியிலிருந்து விலகி தனது மனைவி விளையாடுவதை பார்ப்பதற்காக மெல்பேர்ன் சென்றிருந்தார்.

இதேமைதானத்திலேயே 2015 இல் மிட்செல் ஸ்டார்க் உலக கிண்ண இறுதிப்போட்டியில் நியுசிலாந்தின் பிரெண்டன் மக்கலத்தை ஆரம்பத்திலேயே வீழ்த்தி அவுஸ்திரேலியாவின் வெற்றியை உறுதி செய்திருந்தார்.

ஹீலியின் துடுப்பாட்டத்தை ரசித்த வர்களில் அவுஸ்திரேலியா அணியின் முன்னாள் விக்கெட்காப்பாளரும் ஹீலியின் நெருங்கிய உறவினருமான இயன் லீலியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது குடும்பத்தில் யாரின் கைகள் ஓங்கியுள்ளன என நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு எந்த வித தயக்கமும் இன்றி எனது கையே ஓங்கியுள்ளது என ஹீலி தெரிவித்துள்ளார்.

உலக கிண்ணத்தை வென்ற பல அவுஸ்திரேலிய மகளிர் அணிகளில் நான் இடம்பெற்றிருக்கின்றேன் ஆனால் சொந்த மண்ணில் வெல்வது விசேடமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் நானும் மிச்செல் ஸ்டார்க்கும்1-1 என்ற அடிப்படையில் உள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.



# இங்கிலாந்தை சந்திக்கவுள்ள திமுத் படை விபரம் அறிவிப்பு

இங்கிலாந்து அணியுடனான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள 16 பேர் கொண்ட இலங்கை கிரிக்கெட் அணியினை நேற்றைய தினம் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

திமுத் கருணாரத்ன - தலைவர்
ஓசத பெர்னாண்டோ
குசல் மெண்டிஸ்
அஞ்சலோ மெத்தியூஸ்
தினேஷ் சந்திமல்
குசல் ஜனித் பெரேரா
தனஞ்சய டிசில்வா
நிரோஷன் திக்வெல்ல
சுரங்க லக்மால்
லஹிரு குமார
விஷ்வ பெர்னாண்டோ
கசூன் ராஜித
தில்ருவன் பெரேரா
லசித் எம்புலுதெனிய
லக்ஷான் சந்தகான்
வனிந்து ஹசரங்க



# 37 பந்துகளில் சதம் விளாசிய வீரர் மீண்டும் இந்திய அணிக்கு தெரிவு

தென் ஆபிரிக்கா அணிக்கு எதிராக 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஹர்திக் பாண்டியா மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

26 வயதான பாண்டியா கடந்த செப்டம்பர் மாதத்திற்கு பிறகு எந்த சர்வதேச போட்டியிலும் விளையாடவில்லை.

இந்த சூழலில் மும்பையில் நடந்த உள்ளூர் 20 ஓவர் கிரிக்கெட்டில் போட்டியில் 37 பந்துகளில் அதிரடியாக சதம் விளையாடி தேர்வாளர்களின் கவனத்தை அவர் ஈர்த்துள்ளார்.

இந்திய அணி விபரம் வருமாறு.

விராட் கோஹ்லி (தலைவர்) ஷிகர் தவான், ப்ரித்விஷா, ராகுல், மணீஷ் பாண்டே, ஸ்ரேயஸ் ஐயர், ரிஷப் பந்த், ஹர்திக் பாண்டியா ரவீந்திர ஜடேஜா, புவனேஸ்வர், சாஹல், பும்ரா, நவ்தீப் சைனி, குல்தீப் யாதவ், சுப்மான் கில்.

16 வயது பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டம்

# மன்னார் வெள்ளாங்குளம் அ.த.க மாகாணமட்ட போட்டிக்கு தகுதி



(மன்னார்)

மடு கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற 16 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 2 ஆம் இடத்தினைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள மன்னார் வெள்ளாங்குளம் அ.த.க பாடசாலை அணியினரைப் படத்தில் காணலாம். (ம)




# டோனி குறித்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை-பி.சி.சி.ஐ

தேர்வுக்குழு தலைமை மாறலாம், உறுப்பினர் மாறலாம் ஆனால் தனது எதிர்காலம் பற்றி எந்த ஒரு அறிவிப்பையும் வெளி யிடாமல் தேர்வுக்குழுவை இருளில் வைத்துள்ள தோனி மீதான நிலைப்பாட்டில் பிசிசிஐ-க்கு எந்த ஒரு மாற்றமும் இல்லை என்று பிசிசிஐ வட்டாரங்கள் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

முன்னெப்போதும் இல்லாத முறையில், முன்னுதாரணம் இல்லாத வகையில் உலகக்கோப்பை அரையிறுதிக்குப் பிறகு சர்வதேச கிரிக்கெட்டிலும் ஆடாமல் உள்நாட்டுக் கிரிக்கெட்டிலும் ஆடாமல் தற்போது ஐபிஎல் கிரிக்கெட்டுக்கு மட்டும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருப்பது பலரது புருவத்தையும் உயர்த்தியுள்ளது.

முந்தைய தேர்வுக்குழு தலைவர் எம்.எஸ்.கே. பிரசாத், 'தோனியிடமிருந்து நாங்கள் நகர்ந்து விட்டோம்' என்றார், ஆனால் ரவிசாஸ்திரியோ ஐபிஎல் கிரிக்கெட்டில் தோனி நன்றாக ஆடினால் அவரை ஏன் உலகக்கோப்பை டி20க்குத் தேர்வு செய்ய முடியாது? தாராளமாக செய்யலாம் என்று கூறினார். இப்படி ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கருத்தைக் கூறவிட்டு அமைதியாக வேடிக்கை பார்த்து வருகிறார் தோனி.

"தென் ஆபிரிக்காவுக்கு எதிரான தொடரில் அவரை தேர்வு செய்ய பரிசீலிக்கவில்லை எனும்போது அவரது எதிர்காலம் பற்றி எந்த வித விவாதமும் தங்களிடம் இல்லை" என்று பிசிசிஐ நிர்வாகி ஒருவர் பிடிஐ-யிடம் தெரிவித்துள்ளார்.

"ஏன் தோனி மட்டும், ஐபிஎல் கிரிக்கெட்டில் ஆடும் இளம் வீரர்கள், மூத்த வீரர்கள் ஐபிஎல் கிரிக்கெட்டில் நன்றாக ஆடினால் அவர்களும் தேர்வுக்கு பரிசீலிக்கப்படுவார்கள். எனவே உலகக்கோப்பை அணித் தேர்வில் சில ஆச்சரியங்களை நீங்கள் எதிர்பார்க்கலாம்" என்றார் அவர்.

இந்திய அணி கே.எல். ராகுலை விக்கெட் கீப்பராகவும் பினிஷர் ரோலுக்கும் ஏற்கெனவே நியமித்து அவரும் பிரமாதமாக ஆடிவரும் நிலையில் இன்னும் எந்த ஒரு நிலைப்பாட்டிலும் இல்லாத தோனியை் இனியும் பிடித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று அணித்தேர்வுக்குழு கருதுவதாக செய்திகள் அடிபடுகின்றன.

ஆனாலும் மார்ச் 29-ம் தேதி ஐபிஎல் தொடக்க ஆட்டத்தில் ரோஹித் சர்மா தலைமை மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான தோனி தலைமை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஆட்டத்தையும் தோனியையும் ரசிகர்கள் இன்னமும் கூட ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை.

# வெற்றிப் பயணத்திற்கு வலுச்சேருங்கள்

# ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகள்

# ரணிலுக்காக எப்போதும் திறந்திருக்கும்

## சஜித் பிரேமதாஸ பதில் அழைப்பு



(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகள் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்காக எந்த நேரத்திலும் திறந்திருப்பதாகத் தெரிவித்த முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, கூட்டணியில் இணைந்து வெற்றிப் பயணத்திற்கு வலுச்சேர்க்குமாறும் அழைப்பு விடுத்தார்.**

அத்துடன் ஐ.தே.கவின் அனுமதியுடனேயே இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, இதனை முன்னோக்கிக் கொண்டு செல்லத் தேவையான பலம் எம்மிடத்தில் உள்ளது. இதை முறியடிக்க எவராலும் முடியாது. ஏனெனில் ஜனநாயக ரீதியான பயணத்திலேயே நாம் ஒன்றிணைந்துள்ளோம்.

அதேவேளை ஏனைய இனத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் எம்முடன் வந்து இணைந்து கொள்ளலாம். எதற்காகவும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. எந்த சமயத்திலும் அர்களை பாதுகாக்க நாம் தயாராகவுள்ளோம். ஊழல் மோசடி, கப்பம் பெறுபவர்க ளின் வலைகளில் சிக்கிக்கொள்ள வேண்டாம். தாய்நாட்டை விற்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டாம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் உத்தியோகபூர்வ தேர்தல் பிரசார தலைமை அலுவலகம் நேற்று பத்தரமுல்லை - எதுல் கோட்டே பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## நாட்டின் பல பாகங்களிலும் இன்று அதிகூடிய வெப்பநிலை

(மொனராகலை)

மேல், வடமத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் அதிகளவிலான வெப்பநிலை நிலவக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதற்கமைய குறித்த பகுதி களில் இன்று செவ்வாய்க்கிழமை இவ்வாறு அதி உயர் வெப்பநிலை நிலவும் என அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக் களம் வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதிக வெப்பம் காரணமாக ஏற்படக் கூடிய உபாதைகளை தவிர்த்துக் கொள்ளும் வகையில் விழிப்புணர்வுடன் செயற்படுமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த காலப்பகுதியில் குழந்தைகள், நான்கு வயதுக்குறப்பட்ட சிறுவர்கள், 65 வயதுக்கு மேற்பட்ட வர்கள், உடற்பருமன் கூடியவர் கள், நோயாளர்கள் ஆகியோர் தொடர்பாக அதிகூடிய கவனம் தேவை எனவும் சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது. (ஜ-2)

## பட்டதாரிகளுக்கு பயிற்சி மே 11 -ம் திகதியே ஆரம்பம்

(கொழும்பு)

அரச சேவைகளுக்காக புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கான பயிற்சி வேலைத்திட்டம் மே மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் என அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு வின் கோரிக்கைக்கு அமைய இந் தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி களின் விபரம் நாளை இணையத் தளத்தில் வெளியிடப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை வெளியீடு

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் 196 உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்படவுள்ள நிலையில் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டது.

இதில் ஆகக்கூடிய உறுப்பினர்கள் கொழும்பு மாவட்டத்தில் இருந்து தெரிவாக இருப்பதுடன் ஆகக்குறைந்த உறுப்பினர்கள் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அந்தவகையில் கொழும்பு மாவட்டத்திலிருந்து 19 உறுப்பினர்களும் கம்பஹா மாவட்டத்தில் 18, களுத்துறையில் 10, கண்டி 12, மாத்தளை 05, நுவரெலியா 08, காலி 09, மாத்தறை 07, அம்பாந்தோட்டை 07, யாழ்ப்பாணம் 07, வன்னி 06 மட்டக்களப்பு 05, திகாமடுல்ல 07, திருகோணமலை 04, குருநாகல் 15, புத்தளம் 08 அநுராதபுரம் 09, பொலன்நறுவை 05, பதுளை 09, மொனராகலை 06, இரத்தினபுரி 11 மற்றும் கேகாலை மாவட்டத்தில் இருந்து 09 உறுப்பினர்கள் என 196 உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்படவுள்ளனர்.


அத்துடன் கட்சிகளின் வேட்புமனுவில் அந்தந்த மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் மொத்த உறுப்பினர்களின் தொகையைவிட 3 உறுப்பினர்களின் பெயர்கள் மேலதிகமாக இடப்பட வேண்டும் எனவும் ஆணைக்குழுவின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது.

வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 19 ஆம் திகதியுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## மரண அறிவித்தல்

### வைரமுத்து சுப்பிரமணியம் (மணியம்)

ஓய்வுநிலை சிமெந்து கூட்டுஸ்தாபன ஊழியர்,முன்னாள் வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர், கோப்பாய்(தமிழ்த்தேசிய கூட்டமைப்பு) முன்னாள் பொருளாளர், கோப்பாய் முத்துமாரி அம்மன் கோயில் முன்னாள் பொருளாளர், பழைய மாணவர் சங்கம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.



பிறப்பு 17.04.1947

இறப்பு 08.03.2020

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சுப்பிரமணியம் நேற்று முன்தினம் 08.03.2020 அன்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், சுதர்ஸன் (மயூரன்) (Managing Director EIM Construction and Consultant (pvt) ltd, உரிமையாளர் Mayoo Construction civil Engineer) பாசமிகு தந்தையும், சங்கீதாவின் (வைத்திய அதிகாரி, தளவைத்திய சாலை, பருத்தித்துறை) மாமனாரும், மிதுர்னன் (மாணவன் யாழ். இந்துக் கல்லூரி), பவித்ரன் (மாணவன்-யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இரத்தினம் மற்றும் சிவகாமிப் பிள்ளை (கனடா), காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் மகிழ்மதி (கோப்பாய்) ஆகியோரின் சகோதரனும், சுவேந்திராணி ஸ்ரீஸ்கந்த ராசா (பிரதேச முகாமையாளர் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்), துஷ்யந்தன் (கனடா), பிரபாகரன் (லண்டன்), ஸ்ரீகரன் (ஜேர்மன்), கிருபாகரன் (லண்டன்), பவானி (லண்டன்), புஸ்பராஜா (கனடா), குகேந்திரராஜா (சுவீடன்), மகேஸ்வரன் (சுவீடன்), ரஜனி (சுவீடன்), ரஜிந்தன் (சுவீடன்), குமுதினி (கனடா), காமினி (கனடா) மாமனாரும், முரளிதரன், சசிதரன் (கனடா), ஜெயதரன் (லண்டன்), சுகந்தினி, நிஷாந்தி, சுகி (லண்டன்), சுதாகரன் (கனடா), சுரேஸ்கரன் (கனடா), வசீகரன் (இத்தாலி), அசோக் (சுவிஸ்) ஆகியோரின் சிறிய தகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.03.2020) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரம் ஏற்றுக் கொள்ளவும்.

(2545)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி முன்பாக
பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய்

தகவல் : குடும்பத்தினர்
077 312 6616

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் இயங்கும் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் **(Jaffna College Institute of Agriculture) - Registered with Tertiary and Vocational Education Commission under P25/0026)** விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கான **(Diploma in Agricultural Production Technology (NVQ 5 or 5 and 6)** விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆங்கிலமொழி மூலம் நடைபெறவுள்ள குறித்த பாடநெறிக்கு பயிற்சி நெறிக் காலம் ஆறுமாத காலத் தொழிற் பயிற்சி உள்ளடங்கலாக ஒன்றரை அல்லது இரண்டரை வருடங்களைக் கொண்டது. குறித்த பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்கு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆங்கிலமொழி அறிவு (க.பொ.த. சாதாரண தரம்) சமமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய தகைமை, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் அல்லது தொழில்நுட்பவியல் துறை அல்லது விவசாயப் பாடத்தினை கற்றுக் குறித்த பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது விவசாயத் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் சார் தகைமை **(NVQ Level-4)** பாடநெறியொன்றினை வெற்றிகரமாகப் பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் ஆகியோர் விண்ணப்பிக்க முடியும்.

18 வயது தொடக்கம் 35 வயது வரையான விண்ணப்பதாரிகள் தங்களின் சுயவிபரக் கோவையுடன் அனைத்து விண்ணப்பங்களையும் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ எதிர்வரும் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பம் எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் சுயவிபரக் கோவையில் குறிப்பிட்டப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அது தொடர்பாக தெரியப்படுத்தப்படும்.

விண்ணப்பங்களை அனுப்புவதற்கு அல்லது மேலதிக தகவல்களுக்கு, **"Principal"**

**Jaffna College Institute of Agriculture, Maruthanarmadam, Chunnakam, Email:- jcinstituteofagriculture@gmail.com, Tel:- 021 224 1420** எனும் முகவரியூடாகத் தொடர்பு கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-18)

# பிரதேச சபை உறுப்பினர் வெளிநடப்பு கட்சியில் இருந்து விலகவும் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்குப் பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் இ.மயில்வாகனம் கட்சிக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்ததுடன் கட்சியில் இருந்தும் விலகுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் கோப்பாய்த் தொகுதிக்கான வேட்பாளர் தெரிவில் கட்சி சுயாதீனமாக முடிவெடுக்காமல் பெண் வேட்பாளர் ஒருவரை நியமித்ததால் குறித்த உறுப்பினர் கூட்டத்தைவிட்டு வெளியேறினார். குறித்த கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10-134)

# விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்குப் புத்தூர் பிரதேச சபையின் விசேட கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் தவிசாளர் தி.நிரோஷ் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறும். (இ-10-134)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து விடுவிக்கும் சாவிக்குறியீடு

ஜோதிடத்தில் கேது கிரகத்திற்கு மோட்சக்காரகன் என்று பெயர், "மோட்சக்காரகன்" என்றால் "விடுவிப்பவன்" என்று பொருளாகும். இதே கேது கிரகத்திற்கு விக்னக்காரகன் என்றும் ஒரு பெயர் உள்ளது. "விக்னக்காரகன்" என்றால் "தடுப்பவன்" என்று பொருளாகும். அதாவது தடுக்க வேண்டியதை தடுத்து விடுவிக்க வேண்டியதை விடுவிப்பவன் கேதுவாகும். இந்துக் கடவுளான பிள்ளையாருக்கு விக்னேஷ்வரன் என்று பெயர். விக்னங்களை விலக்குபவன் பிள்ளையாராகும்.

கேது கிரகத்தின் அதிதேவதையான பிள்ளையார், ஒரு வாயில் காப்பாளனாக புராணக்கதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளான். வாயில் காப்பாளன் கையில் தான் பூட்டு சாவி இருக்கும். பூட்டு சாவியைக் கொண்டு ஒரு வாயிலை அடைக்கவும் செய்யலாம். திறக்கவும் செய்யலாம். பூட்டை பூட்டுவதும் திறப்பதும் சாவியின் வேலையாகும். சாவியானது கேது கிரகத்தின் ஆதிக்கத் தன்மையுள்ள ஒரு பொருளாகும்.

கேதுவின் பாதிப்பில் உள்ளவர்கள் எப்பொழுதும் கையில் ஒரு சாவிக் கொத்தை வைத்திருந்தால் பாதிப்புகள் குறையும்.

மதுப்பழக்கம், புகைபிடித்தல், புகையிலை போடுதல், போதை மருந்துக்கு அடிமையாதல் போன்ற கெட்ட பழக்கவழக்கங்களிலிருந்து விடுபட நினைப்பவர்கள் பிள்ளையாரின் உருவப்படத்தையோ அல்லது ஒரு சாவியின் உருவப்படத்தையோ தினமும் பார்த்து வந்தால் அத்தகைய கெட்ட பழக்கவழக்கங்களிலிருந்து விரைவில் விடுபடலாம்.

# நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வது நோக்கம் அல்ல கண்டல் தாவரங்களைப் பாதுகாப்பதே எம் நோக்கம்

## குருவிக்காடு குறித்து வன அதிகாரிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சரசாலை-குருவிக் காட்டுப் பகுதியில் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வது எமது நோக்கம் இல்லை எனவும் குருவிக் காட்டுப் பகுதியில் உள்ள கண்டல் தாவரங்களைப் பாதுகாப்பதே எமது நோக்கம் என யாழ்.மாவட்ட பகுதி வன அதிகாரிகள் தெரிவித்தனர்.

சரசாலைப் பகுதியில் வனவளத் திணைக்களம் சுமார் 896 ஹெக்டேயர் அளவுடைய அரச மற்றும் தனியார் காணிகளை எல்லைப்படுத்தி கையகப்படுத்தப் போவதாக சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் பொதுமக்கள் அண்மையில் எதிர்ப்பு வெளியிட்டதுடன் இது தொடர்பாக ஊடகங்களிலும் கருத்துக்களைப் பகிர்ந்திருந்தனர்.

இந் நிலையில் இது தொடர்பாக தெளிவுபடுத்த சாவகச்சேரி பிரதேசசபைக்கு வருகை தந்திருந்த பகுதி வன அதிகாரிகளே சபை உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்களிடம் இவ்வாறு தெரிவித்திருந்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், நிலங்களை ஆக்கிரமிப்பது எமது நோக்கம் அல்ல. அப்பகுதியில் உள்ள கண்டல் தாவரங்கள் வகை தொகையின்றி அழிக்கப்படுகின்றன. காடழிப்பை தடுக்கவே எல்லைப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளோம். இதனூடாக எதிர்வரும் காலங்களில் கண்டல் தாவரங்களை அழிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அத்துடன் தனியார் காணிகள் இவ் எல்லைப்படுத்தல்களுக்குள் அகப்பட்டிருந்தால் அவர்கள் உரிய ஆதாரங்களைக் காண்பித்து தமது காணிகளை விடுவித்துக்கொள்ள முடியும். அத்துடன் எமது நடவடிக்கையால் அப் பகுதியில் உள்ள மயானம் மற்றும் சவாரித்திடல் ஆகியவற்றுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது. அத்துடன் எல்லைப்படுத்தல் தொடர்பாக முன் அறிவித்தல் எவையும் எம்மால் விடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் நாம் கடந்த 8 மாதங்களுக்கு முன்னராகவே எல்லைப்படுத்தல் தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபை குருவிக் காட்டுப் பகுதியை சமுதாயக் காடாக பிரகடனப்படுத்தியதுடன், அதனை பாதுகாக்கும் பொறுப்பினையும் பிரதேசசபை எடுத்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-30)

# இராசி பலன்

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** மற்றவர்களின் மன நிலையை அறிநது செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும்.

**இடபம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும்.

**மிதுனம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வாகன சுகமுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், குறைவாகப் பேசினாலும் குறைகூறி பேசாமல் இருப்பது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

| | | | |
|---|---|---|---|
| | சுக் | | ராகு |
| சூரி | இராசி பலன் | கிரகநிலை | |
| புத | சந்திராஷ்டமம் | அவிட்டம், சதயம் | சந் |
| சனி,செவ் கேது,குரு | | | |

**10.03.2020**
மாசி 27, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
பிரதமை முன்னிரவு 9.41 மணிவரை
உத்தரம் பின்னிரவு 12.20 மணிவரை
சுபநேரம் 10.53-12.23 மணிவரை
இராகுகாலம் 3.23-4.53 மணிவரை
திருவள்ளுவர் குருபூஜை
உறுதியளித்துத் தாமதப்படுத்துபவன் நன்றி இழப்பான்.
-வளவன்

**கடகம்:** ஆதரவுக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை கூடும், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.

**மகரம்:** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.

**சிம்மம்:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விருந்தினர் வருகை விருப்பத்தை நிறைவேற்றும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** புதிய முயற்சிகள் கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், கொள்ளைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் கூடும்.

**கன்னி:** தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

# அமெரிக்காவை மிரட்டும் கொரோனா நியூயோர்க்கில் அவசர நிலை பிரகடனம்

(வோஷிங்டன்)

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ், தற்போது அமெரிக்காவில் 30 மாகாணங்களில் பரவியுள்ள நிலையில் நியூயோர்க் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நியூயோர்க் மாகாணத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 89 ஆக அதிகரித்திருப்பதை தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் ஆண்ட்ரூ கூமோ தெரிவித்தார்.


கொரோனா வைரஸ் பரவலை தடுக்க அந்த நாட்டு சுகாதாரத் துறை அமைச்சகம் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கலிபோர்னியா, ஹவாய் ஆகிய மாகாணங்களில் ஏற்கனவே அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக தற்போது நியூயோர்க் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 500 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 22பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# பாதையை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதிய பேருந்து

## 18 பேர் வைத்தியசாலையில் அனுமதி



(திருப்பனே)

ஏ-9 வீதியின் திருப்பனே பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 18 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் சென்று நேற்று திங்கட்கிழமை அதிகாலை 3.15 மணியளவில் யாழ். நோக்கிப் பயணித்த பேருந்து, பாதையை விட்டு விலகி, மின்கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது.

இந்த விபத்தில் பேரு ந்தில் பயணித்த 55 பேரில் 18 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் விபத்து தொடர்பாக பேருந்துச் சாரதி கைது செய்யப்பட்டதுடன், திருப்பனே பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சர்வதேச மகளிர் தின விழா

(குப்பிழான்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெறும்.

இதன்போது "பெண்களுக்கான சமத்துவம் என்பது நம் சமூகத்தில் கோட்பாட்டிலா? - செயற்பாட்டிலா? எனும் தலைப்பில் அமைந்த பட்டி மண்டபம் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் தலைமையில் இடம் பெறும்.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை முதுநிலை விரிவுரையாளர் கோசலை மதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, விவசாய அமைச்சு உத்தியோகத்தர் ந.ஜங்கரன், தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் மாலினி அஜந்தன் ஆகியோர் வாதிகளாகவும், பிரதிவாதிகளாகவும் கலந்து கொள்வர். (இ-18)

### பெயர் மாற்றம்

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாயை வசிப்பிடமாகக் கொண்ட எனது பெயர் வில்வராசா உதயராசா எனும் பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் வில்வராசா விஜயராசா என தவறுதாலாகப் பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் வில்வராசா உதயராசா எனும் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
வில்வராசா உதயராசா

(2521)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா: 17½ செவ் 10 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. தச்சு வேலை
எதிர்பார்ப்பு: ஓரளவு படித்த பெண்
தொ.இ: B/10627

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா: செவ் 2 இல்
உயரம்:175cm
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி. அரச உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/10628

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 1
கி.பா: 18 செவ் 11 இல்
தகைமை/தொழில்: டோகா சாரதி
எதிர்பார்ப்பு: படித்த பெண், சைவபோசனம்
தொ.இ: B/10630

பிறப்பு:1984 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 52 செவ் 3 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:க.பொ.த.சா.த. C.T.B mechanic
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் , சைவபோசனம்
தொ.இ: B/10631

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 14 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: After A/L, Followed private courses, Customer service.Manager
எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்.
தொ.இ: G/10646

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1 செவ் 5 இல்
உயரம்: 5"
தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி.
எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/10651

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: செவ் 9 இல்
உயரம்: 5 "
தகைமை/தொழில்:க.பொ.த.சா.த.
எதிர்பார்ப்பு: சாதாரண தொழில் செய்பவர்
தொ.இ: G/10656

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 31 3/4 செவ் 10 இல்
தகைமை/தொழில்: B.A.பட்டதாரி
எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது உத்தியோகம்
தொ.இ: G/10658

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# ஆதனப்பெயர்மாற்றம்

இல. 25/5 ஜதுறூஸ் மக்கம் வீதி, யாழ்ப்பாணம் என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட 21 ம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதனம் யாழ்ப்பாணம் மாநகரசபையால் வரிமதிப்பேட்டு புத்தகத்தில் அப்துல் காதர் பெண் செய்நம்பு நாச்சியார் காதர் சாகிப் முகமது என்ற பெயரில் காணப்படுகிறது.

இவ்வாதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 17.05.2019 ம் திகதி 10732ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி ஊடாக யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதி தற்காலம் குருநாகல் பன்னல பெனாலத்த, கொட்டுவெல வீதியில் வசிக்கும் முகமது அப்துல் காதர் சரிபு என்பவரால் அராலி வீதி பொம்மைவெளி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இஸ்மதியில் அப்துல் சலாம் என்பவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குறித்த 10732ம் இலக்க உறுதியில் குறித்த ஆதனம் 1941 ம் ஆண்டு மாசி மாதம் 03 ம் திகதி பிரசித்த நொத்தாரிசு முகமது மரைக்கார் முகமது சுல்தான் முன்பாக 248ம் இலக்கத்தில் உறுதி நிறைவேற்றுநரின் காலஞ்சென்ற தாயாரான சுல்தான் அப்துல் காதர் முகமது கௌத் பெண் செய்நம்பு பெயரில் நிறைவேறிய அறுதி உறுதியாலும் வேறு கைவசமற்ற உறுதிகளாலும் குறித்த செய்நம்புவுக்கு சொந்தமும் ஆட்சியுமாயிருந்து உறுதி நிறைவேற்றுநரை வந்தடைந்த முதுசமும் ஆட்சியுமான ஆதனமாகும்.

குறித்த 10732ம் இலக்க உறுதியின் தாயுறுதியாக குறிப்பிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு முகமது மரைக்கார் முகமது சுல்தான் முன்பாக நிறைவேறிய 248ம் இலக்க உறுதியானது சொரியலான ஐந்து குளி விஸ்தீரணமான ஆதனம் தொடர்பிலேயே நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதுடன் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுகின்ற முழு ஆதனத்தையும் உள்ளடக்கவில்லை.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகரசபை யாழ்ப்பாண பிரதேச செயலகம் கிராம அலுவலர் பிரிவு J/87 வண்ணார்பண்ணை மேற்கு இறை "இத்தியடி" நில.பர.2 குளி 15 1/2 இதில் சொரியல் குளி 5 மேற்படி இறை "இத்தியடி" நில.பர.2 குளி 15/2 இதில் சொரியல் நில.பர. 2 குளி 10 1/2 இச் சொரியல் பாகங்கள் சேர்ந்த நிந்தமாக நில.பர.2 குளி 15 1/2 ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் 29.12.2017 ஆம் திகதியில் அளந்து தயாரித்த 3805ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டியபடியும் ஆட்சியின்படியும் விஸ்தீரணம் நில.பர (1) ஒன்று குளி (9.44) ஒன்பது தசம் நான்கு நான்கு கிணறும் வீடும் அதற்குரியவைகளும் இதன் எல்லை.

கிழக்கு:- பததை முகப்பும் எஸ்.எம்.மீரா மொகிதீன் ஆதனமும் தவராசா கைம்பெண் குணசீலியின் ஆதனமும், முகமது சுல்தான் நாச்சியா மொகதீனின் ஆதனமும்.

வடக்கு:- எஸ்.எம்.மீரா மொகிதீனினதும் தவராசா கைம்பெண் குணசீலியினதும் முகமது சுல்தான் நாச்சியா மொகிதீனினதும் சம்சுனிஸ்ரா லாமீரின் ஆதனமும்.

மேற்கு:- அப்துல் காதர் சின்ன்த்தம்பியின் ஆதனமும், மதுரசா பாடசாலையின் ஆதனமும் நொக்ஸஸனின் ஆதனமும்.

தெற்கு:- ரி.சிவக்கொழுந்துவின் ஆதனம் இதடாங்கலும். இன்னும் கிழக்கே உள்ள ஜதுறூஸ் மக்கம் வீதிக்கு போக்குவரவு செய்ய இவ்வாதனத்தை தொடுக்கும் பாதையில் பாவிப்புரித்தும்.

தற்போது இஸ்மயில் அப்துல் சலாம் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இம்மானுவல் ஆனல்ட்
முதல்வர்
மாநகரசபை.

(சி-9446)

# சர்வதேச மகளிர் தினத்தை இலங்கையில் தேசிய விடுமுறையாக அறிவிக்கவேண்டும்

## விடுதலைப் புலிகள் கட்சி கோரிக்கை

(முறாவூர்)
சர்வதேச மகளிர் தினத்தினை இலங்கையில் தேசிய விடுமுறையாக அறிவிக்க அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும் எனத் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

அத்துடன் கிழக்கை நேசிக்கும் கட்சிகளையும் கிழக்கு மாகாணத்தினை நேசிப்பவர்களையும் இணைத்து தேர்தல் கூட்டணியை எதிர்வரும் சில நாட்களில் அறிவிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன், கட்சியின் பிரதி தலைவர் கே.யோகவேள், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. கெனடி பிரான்சிஸ், ஆலோசகர் ஸ்டாலின், சுவிஸ் உதயம் அமைப்பின் தலைவர் க.துரைநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டதுடன், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களும் கலந்துகொண்டனர்.

பெண்கள் சமத்துவத்தினை உறுதிப்படுத்து என்னும் தலைப்பில் இந்த ஊர்வலம் ஆரம்பமாகி மட்டு.நகர் ஊடாகச் சென்று கட்சியின் தலைமையகத்தினை சென்றடைந்ததும் அங்கு நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ)



## தீக்காயங்களுடன் பெண் சடலமாக மீட்பு

(சிலாபம்)
சிலாபம்-முன்னேஸ்வரம் பகுதியில் தீக்காயங்களுடன் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

கிடைத்த தகவலுக்கமைய நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

78 வயதான பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மக்கள் சக்தியின் சின்னம் தொடர்பில் குழப்பமடைய தேவையில்லை



(மாவனெல்ல)
ஐக்கிய மக்கள் சக்தியின் சின்னம் தொடர்பில், மக்கள் குழப்பமடையத் தேவையில்லை என முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அத்துடன், சஜித் பிரேமதாஸவே தமது சின்னமெனவும் சம்பிக்க தெரிவித்தார்.

மாவனெல்ல பிரதேசத்தில், நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் மக்கள் விடுதலை முன்னணியிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் ஐ.தே.க விலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சஹ்ரான், என்.டி.ஜே.அமைப்புக்கு நிதியளித்த 7 பேரைத்தேடும் சி.ஐ.டி.

(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான, பயங்கரவாதி சஹ்ரான் ஹாஷிமுக்கும் அவரது என்.டி.ஜே. எனப்படும் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புக்கும் நிதியுதவியளித்து வந்த முக்கிய நபர்கள் 7 பேரைத் தேடி சி.ஐ.டி விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இதுவரை விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை மையப்படுத்தி இந்த சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சட்டத்தரணி ஒருவர், பொறியியலாளர் ஒருவர், இரு வைத்தியர்கள், இரு வாகன விற்பனையாளர்கள் இந்த 7 பேரில் உள்ளடங்குகின்றனர்.

எவ்வாறாயினும் குறித்த 7 பேரும் நாட்டிலிருந்து வெளியேறி வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ளதாக சந்தேகித்திருக்கும் சி.ஐ.டியினர், அவர்களில் சிலர் அவுஸ்திரேலியா, துருக்கி மற்றும் அமெரிக்காவில் இருப்பது தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாகவும் அதனை மையப்படுத்தி இன்டர்போல் மற்றும் சர்வதேச உளவுத் துறைகளின் உதவியோடு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## பேஸ்புக் களியாட்டம்

# போதைப்பொருட்களுடன் 77 பேர் அதிரடியாகக்கைது

(பன்னிப்பிட்டிய)
பன்னிப்பிட்டிய பகுதியில் பேஸ்புக் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்ட 77 பேர் கைது செய்யப்பட்டனர்.

மகரகம பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் 60 ஆண்களும் 17 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அவர்களிடமிருந்த கேரளக்கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களை பொலிஸார் கைப்பற்றினர்.

குறித்த சந்தேகத்திற்குரியவர்கள் 18 முதல் 35 வயதிற்கு உட்பட்டவர்கள் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது. (இ-7)

# இருவாரங்களில் ரூ.19.6 பில்லியன் வெளிநாட்டு முதலீடுகள் இழப்பு

(கொழும்பு)
வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கடந்த இரண்டு வாரங்களில் 19.6 பில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி முறைகள், பத்திரங்களில் செய்துள்ள முதலீடுகளை விலக்கிக் கொண்டுள்ளதால், இலங்கையின் பொருளாதாரம் பெரும் நெருக்கடியைச் சந்தித்தது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, உலக பொருளாதாரம் மந்தமடைந்தது.

இதையடுத்து, இலங்கையின் திறைசேரி முறிகள், பத்திரங்களில் செய்துள்ள முதலீடுகளை வெளிநாட்டவர்கள் திடீரென விலக்கிக் கொண்டு வருகின்றனர்.

இலங்கை மத்திய வங்கி தரவுகளின்படி, கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிந்த ஒருவார காலத்தில், 8.23 பில்லியன் ரூபாவை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விலக்கிக் கொண்டனர். அதற்கு முதல் 11.42 பில்லியன் ரூபாய் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இரண்டு வாரங்களில்19.6 பில்லியன் ரூபாய் முதலீடுகளை வெளிநாட்டவர்கள் விலக்கிக் கொண்டதால், இலங்கையின் பொருளாதாரம் கடுமையான பாதிப்பைச் சந்தித்து வருகிறது.

கொரோனா வைரஸ் உலகெங்கும் பரவி வருவதால், எதிர்வரும் நாட்களில் இலங்கை பொருளாதார ரீதியாக மேலும் நெருக்கடிகளைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

# பேருந்து கவிழ்ந்து 23 பேர் பலி

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் பயணிகளை ஏற்றிக்கொண்டு மலைப்பாதையில் சென்ற பேருந்து, பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 23 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரில் இருந்து நேற்றுக் காலை ஸ்கார்டு பகுதிக்கு சுமார் 25 பயணிகளை ஏற்றிக்கொண்டு ஒரு பேருந்து சென்றது. கில்கிட் அருகே உள்ள ராவுண்டு என்ற இடத்தில், மலைப்பாதையில் சென்றபோது பேருந்து திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது.

தாறுமாறாக ஓடிய பேருந்து, கண்ணிமைக்கும் நேரத்திற்குள் ஆழமான பள்ளத்தாக்கில் விழுந்தது. இதனால் பேருந்து கடுமையாக சேதமடைந்தது. பயணிகள் அனைவரும் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 23 பேர் உயிரிழந்தனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்படுகிறது. (ஐ-2)

# நாடாளுமன்றத்தேர்தல் வெற்றியின் பின்னர் துரிதமாக பாதீட்டை முன்வைக்க நடவடிக்கை

## கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)
பொதுத்தேர்தல் வெற்றியின் பின்னர் துரிதமாக பாதீட்டை முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசாங்க இணைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குத் தேர்தல் செலவுகள் உட்பட அரசாங்கத்தின் செலவுகளை மேற்கொள்வதற்கு திறைசேரி செயலாளருக்கு அதிகாரமளித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரபூர்வமான அனுமதியை வழங்கினார்.

ஜனாதிபதிக்கு அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.



அந்த வகையில் அமைச்சுக்களுக்கு அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேட்டியுள்ள நிலுவைகள் மற்றும் ஏனைய செலவுகளை மேற்கொள்ள முடியுமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மைத்திரியின் செயற்பாட்டில் பாரிய குறைபாடுகள்

## தெரிவுக்குழுத் தலைவர் குற்றச்சாட்டு

(மொனராகலை)

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பிரதமர் ஆகியோரே பொறுப்புக்கூற வேண்டும் என குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஆராய்ந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் ஆனந்த குமாரஸ்ரீ தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், முன்னாள் ஜனாதிபதியின் செயற்பாட்டில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

மொனராகலையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஆனந்த குமாரஸ்ரீ, "உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஆராயப்பட்ட எமது தெரிவுக்குழுவின்



அறிக்கையில், பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தோம்.

இந்தத் தாக்குதல் இடம்பெறக் காரணமான பல விடயங்களை வெளிக்காட்டியிருந்தோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் ஏப்ரல் முதல் வாரமளவிலேயே சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு புலனாய்வுத் தகவலின் எச்சரிக்கைக்கு இணங்க, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்குமானால், இந்தச் சம்பவத்தை தடுத்திருக்கலாம்.

அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர், பாதுகாப்புத்துறை பிரதானிகள், பாதுகாப்புச் செயலாளர் என அனைவரும்தான் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில்தான் நாம் இந்த விடயங்களை தெரியப்படுத்தினோம்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், முன்னாள் ஜனாதிபதியின் செயற்பாட்டில் பாரிய குறைப்பாடுகள் காணப்படுகின்றன.

அதேபோல், முன்னாள் பிரதமர் சாட்சி வழங்கியபோது, பாதுகாப்பு கூட்டங்களின்போது தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார். அவர்கள் கூறிய அனைத்தையும் நாம் தெளிவாக எமது அறிக்கையில் தெரியப்படுத்தியுள்ளோம்" என மேலும் தெரிவித்தார். (இ-2)

# படுகொலை செய்யப்பட்ட பல்கலை. மாணவனின் பிறந்தநாள் நினைவஞ்சலி





(குப்பிழான்)

கடந்த 2016 ஆம் ஆண்டு பொலிஸாரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவனான சுலக்ஷனின் 28 ஆவது பிறந்த தின நினைவஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் பொதுநூலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள சுலக்ஷன் ஞாபகார்த்த பேருந்து தரிப்பு நிலையத்தில் இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்ட மாணவனின் தந்தை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலி.தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் க.தர்ஷன், வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் எஸ். அன்ரன், வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் சி.அகீபன் மற்றும் சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் ஆகியோர் கலந்துகொண்டு மலர்மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர். (இ-18)

# கச்சாய் எண்ணெயின் விலை உலக சந்தையில் பெருவீழ்ச்சி

## இலங்கையிலும் எரிபொருள் விலை குறைகிறது

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருள் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து, எரிபொருள் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது. விலைத் திருத்தம் குறித்து அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இதற்கிடையில், உலக சந்தையில் கச்சாய் எண்ணெய் விலை



நேற்று மிகவும் குறைந்துள்ளது. ஒரு பீப்பாய்கச்சாய் எண்ணெயின் விலை 25% முதல் 30% வரை குறைந்துள்ளது. இது 1991 இற்குப் பிறகு ஒரே நாளில் எண்ணெய் விலையில் ஏற்பட்ட மிக உயர்ந்த வீழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் கச்சாய் எண்ணெய் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன. கச்சாய் எண்ணெயின் விலையைக் குறைக்க சவுதி அரேபியா எடுத்த முடிவு இந்த நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளது. (இ-7)

# பிள்ளைகளை கொலை செய்தபின் தானும் தற்கொலை செய்த தந்தை

(கொக்கரெல்ல)

கொக்கரெல்ல வெவ்சிறிகம பகுதியில் தந்தை ஒருவர் தனது இரண்டு பிள்ளைகளையும் கொலை செய்து தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று பிற்பகல் தனது இரண்டு பிள்ளைகளையும் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதன் பின்னர் அவரும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

6 வயதான ஆண் பிள்ளை ஒன்றும் 3 வயதான பெண் பிள்ளை ஒன்றுமே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட இரண்டு பிள்ளைகளினதும் தாயார் கட்டுநாயக்க பகுதி விடொன்றில் தொழில் புரிபவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கொக்கரெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (இ)

# அதிகரித்துவரும் கடத்தல்களைத் தடுக்க இலங்கை- இந்திய கடற்படை கூட்டு ரோந்து

(கொழும்பு)

இலங்கை -இந்திய சர்வதேச கடல் எல்லை ஊடாக அதிகரித்துவரும் கடத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை இந்தியக் கடற்படையின் உதவியுடன் முழுமையாகக் கட்டுப்படுத்துவோம் என இலங்கை கடற்படை கட்டளைத் தளபதி பியஸ் டீ சில்வா தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக இலங்கை-இந்திய சர்வதேச கடல் எல்லை வழியாக கஞ்சா, பீடி இலைகள், தங்கம் என்பவை கடத்தப்படுவதாகவும் தமிழகத்தில் இருந்து இலங்கை அகதிகள் உரிய அனுமதியின்றி படகில் இலங்கைக்கு செல்வதாகவும் சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகவும் இலங்கை கடற்படை கட்டளைத்



தளபதி பியஸ் டீ சில்வா தெரிவித்தார்.

இது குறித்து கச்சதீவு திருவிழாவில் கலந்துகொண்ட இவரிடம் இந்திய ஊடகவியலாளர்கள் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக் கடற்படை சார்பில் சர்வதேச கடல் எல்லையில் ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எனவே எதிர்வரும் நாட்களில் இந்திய கடற்படை மற்றும் இந்திய கடலோர காவல்படை உதவியுடன் இந்தியாவில் இருந்துவரும் கேரளக்-கஞ்சா, அதேபோல் இலங்கையில் இருந்து கொண்டு செல்லப்படும் தங்கம் உள்ளிட்ட சர்வதேச கடல் வழியாக நடைபெறும் கடத்தல் சம்பவங்கள் முற்றிலும் தடுக்கப்படும். இவற்றைத் தடுக்க இலங்கை கடற்படை இந்திய கடற்படையுடன் இணைந்து கூட்டு பயிற்சியில் ஈடுபடுவது குறித்து இரு நாட்டு கடற்படைகளும் ஆலோசனை நடத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவைக்கு உள்ளீர்ப்பு

(சாவகச்சேரி)

வடக்கிலுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளை பொலிஸ் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கான வேலைத்திட்டம் இடம்பெற்று வருவதாகவும், அதற்கான விண்ணப்ப படிவங்களை அந்தந்த பிரிவு பொலிஸ் நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். வடக்கு மாகாணத்தில் இரண்டாயிரம் புதிய தமிழ் பொலிஸாரை உருவாக்கிக் கொள்ளும் முகமாக இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாகவும் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு மற்றும் பயிற்சிகள் யாவும் வடக்கு மாகாணத்திலேயே இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே 28 வயதிற்கு உட்பட்ட க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் மற்றும் கணித பாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் பொலிஸ் சேவைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவித்தனர். எனவே வடக்கிலுள்ள தமிழ் இளைஞர், யுவதிகள் தாமதிக்காமல் அந்தந்தப் பிரிவு பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு மேலும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விண்ணப்பப்படிவங்களைப் பெறுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தனர். (இ-30)

# வாக்குரிமையை மத ரீதியாக பார்க்க வேண்டாம்

## கிளி. சர்வமத நல்லிணக்க குழுவினர் கோரிக்கை



(முறிகண்டி)

வாக்காளர்கள் தமது வாக்குரிமையை மத ரீதியாகவும் இன ரீதியாகவும் மொழி ரீதியாகவும் பார்க்காமல் அதனை ஜனநாயகத்தினுடைய ஒரு அங்கமாக பார்த்து சரியான தலைவர்களை தெரிவு செய்ய வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட சர்வமத நல்லிணக்க குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட சர்வமத நல்லிணக்க குழுவினர் நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள சோலைவனம் விடுதியில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பலம் வாய்ந்த ஒரு ஆயுதம் வாக்குரிமை. அதனை மத ரீதியாகவும் இன ரீதியாகவும் மொழி ரீதியாகவும் நாங்கள் பார்க்காமல் ஜனநாயகத்தின் ஒரு அங்கமாகப் பார்க்க வேண்டும். மதத்துவேஷங்கள், இனத்துவேசங்களுக்கும் நாங்கள் இடம் கொடுக்கக் கூடாது.

இதேவேளை வாக்களிக்காமல் ஒருவரும் இருக்கக்கூடாது. கட்டாயமாக குறித்த நேரத்திற்கு நாங்கள் சென்று வாக்களிக்க வேண்டும்.

ஆலயங்களின் முக்கிய நோக்கம் ஆன்மீகம் ஆகும். எல்லோர் மீதும் அன்பு செலுத்துவது ஆன்மீகம் கற்றுத்தரும் பாடமாகும். நாங்கள் அதனை அரசியலாக கொண்டு வரக்கூடாது.

மதங்களையும், இனங்களையும், சாதியம் உள்ளிட்டவற்றை இலக்குவைத்து கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைகளை மக்கள் நிராகரித்துள்ளனர். குறித்த செயற்பாடுகளை இனம்கண்டு கடந்த காலங்களில் செயற்பட்டது போன்று இம்முறையும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

மதங்கள் அனைத்தும் அன்பையே போதிக்கின்றது. அதனை ஒருபோதும் அரசியலாக பயன்படுத்தக்கூடாது. மக்கள் நிதானமாகவும், அனைவரையும் நேசிக்கின்ற வகையிலும் செயற்பட வேண்டும்.

இலங்கையில் உள்ள பிரஜை எந்தமதத்தினையும், எந்த இனத்தவரையும் தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்யமுடியும். யாருக்கு வேண்டுமானாலும் வாக்களிக்க முடியும். சுயமாக சிந்தித்து வாக்களிக்கும் உரிமை மக்களிற்கு உண்டு. அதனை குழப்பும் வகையிலும், மத, இன வாதங்களை ஏற்படுத்தும் வகையிலும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

நடைபெறவுள்ள தேர்தல் அமைதியாக இடம்பெறவும், அனைத்து பிரஜைகளும் வாக்களித்து தமது உரிமையை பாதுகாக்க வேண்டும். அனைவரும் ஒரே இனம், ஒரே மக்கள் என்ற சிந்தனை வளர்க்கப்பட வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தனர்.

குறித்த ஊடக சந்திப்பில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (9-100-315)

# தமிழ் மக்களின் உதவியுடன் தேர்தலில் நிச்சயம் வெல்வேன்

## கேணல் ரட்ணப்பிரிய



(நெளுக்குளம்)

தமிழ் மக்கள் மத்தியிலே எனக்கு பூரண ஆதரவு இருக்கின்றது. எதிர்வரும் தேர்தலில் நிச்சயமாக நான் வெற்றிபெறுவேன் என இலங்கை இழப்பீட்டு காரியாலயத்தின் முன்னாள் ஆணையாளரும், பாராளுமன்ற தேர்தல் வேட்பாளருமான கேணல் ரட்ணபிரிய தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த அவர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்ததுடன் வவுனியா கந்தசாமி ஆலயத்தில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் வடக்கு பகுதியிலே இராணுவத்தில் கடமையாற்றிய போது முல்லைத்தீவு மற்றும் புதுக் குடியிருப்பு தமிழ்மக்களுடன் நெருங்கிய தொடர்பு எனக்கு இருந்தது.

தமிழ் மக்களுக்கு பல உதவிகளை இந்த வன்னிப் பகுதியிலே செய்திருக்கின்றேன். அத்தோடு பாடசாலைகளுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கின்றேன். இன, மத பேதமின்றி தமிழ் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு இந்தப் பகுதியிலே நான் களம் இறங்கியிருக்கின்றேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின் கீழ் அவருடைய கொள்கையின் அடிப்படையிலே நான் வன்னி நிலப்பரப்பிலே தமிழ் மக்களோடு இணைந்து சேவையாற்றுவதற்காக முன்வந்திருக்கிறேன்.

நிச்சயமாக எனக்கு இந்தப் பகுதியிலே உள்ள மக்கள் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். நிச்சயம் நான் வெல்வேன். (9-299-250)

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபானங்கள் மீட்பு

(மன்னார்)



மன்னாரில் போயா தினமான நேற்று திங்கட்கிழமை சட்ட விரோதமான முறையில் விற்பனைக்கு வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை மதுபானங்களை மன்னார் மதுவரி திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

படைத்தரப்பினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் சின்னக்கடை பகுதியில் உள்ள வீட்டிற்குச் சென்ற படையினர் சோதனை நடத்திய போது சட்ட விரோதமான முறையில் விற்பனை செய்ய வீட்டு வளாகத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை மதுபானங்களை கைப்பற்றியுள்ளனர்.

குறித்த வீட்டின் உரிமையாளர் தப்பிச்சென்றுள்ள நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற மன்னார் மதுவரி திணைக்கள அதிகாரிகள் மதுபானங்களை மீட்டுச் சென்றுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (9-285)



இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியின் ஏற்பாட்டில் “வல்ல தேசத்தின் வலிமைமிகு பெண்க ளாக” எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி பசுமைப் பூங்கா வில் இடம்பெற்றது. (படங்கள்:- முறிகண்டி, கண்டாவளை செய்தியாளர்கள்)




# சாதனையாளர்கள் கௌரவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் தேசிய மட்ட சாதனையாளர்கள் கௌரவிப்பும் வழிப்படுத்திய ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை அதிபர் கி.விக்கினராஜா தலைமையில் பொன் சபாபதி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி சுற்றாடல் முன்னோடிக் குழுவின் மாவட்ட ஆலோசகரும் சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகருமான ஜெ.நிஷாகர், கரைச்சிக் கல்வி கோட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் தி.கோணேஸ்வரன், கரைச்சிக் கோட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்களான எஸ்.உமாசுதன், எஸ்.லதீஷ்குமார் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சுற்றாடல் முன்னோடிகளுக்கான சர்வதேச ஈர நிலத்தை முன்னிட்டு நடத்தப்பட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவனும் 2019 ஆம் ஆண்டிற்கான மெய்வல்லுநர் தேசிய நிலையில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட விசேட தேவை மாணவர்கள், பொசிபோல் விளையாட்டில் மூன்றாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்கள் மற்றும் நெறிப்படுத்திய ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். (9)

## கிளி.கனகாம்பிகைக் குளத்தில் அமைந்துள்ள

# தானிய பாதுகாப்பு களஞ்சியசாலையை விவசாயிகள் பயன்படுத்துவதில்லை

(கண்டாவளை)

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தில் அமைந்துள்ள விவசாயிகளின் தானிய பாதுகாப்பு களஞ்சியசாலையினை விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வதன்மூலம் தமது விளைபொருட்களுக்குரிய விலைகளை பெற்றுக்கொள்ளமுடியும் என மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் காலபோகத்தின் போதும் சிறுபோகத்தின் போதும் அறுவடை செய்யும் நெல்லை உரிய சந்தைப்படுத்தமுடியாமல் தனியார் வர்த்தகர்களுக்கு குறைந்த விலைகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

குறிப்பாக, இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்யும் நெல்லை உரிய முறையில் உலரவிட்டு பாதுகாக்கக்கூடிய போதிய நெல் உலர விடு தளங்கள் மற்றும் மேற்படி களஞ்சியசாலை என்பன உள்ளபோதும் அதனை விவசாயிகள் சரியாக பயன்படுத்திக் கொள்வதில்லை. இதனால் தனியார் குறைந்த விலைகளில் நெல்லைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் பகுதியில் சுமார் 185 மில்லியன் ரூபா செலவில் சுமார் நான்காயிரம்மெற்றிக்தொன் நெல்லை உலரவைத்து களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள விவசாயிகள் தானிய பாதுகாப்பு களஞ்சியசாலையில் ஒரு சில விவசாயிகளே தமது நெல்லை களஞ்சியப்படுத்தி வைக்கின்றனர். இதனை அதிக விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளும் போதும் அறுவடைக் காலங்களில் நெல்லுக்கான நிர்ணய விலைகளை பெற்றுக்கொள்ள முடியும் என மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# சமயம் சார்பாக தேர்தலில் போட்டியிடுவது எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்

## மன்னார் மறை மாவட்ட ஆயர்



(மன்னார்)
கத்தோலிக்க மக்களாகிய நாம் நாட்டு நலனையும் நமது இனத்தின் நலனையும் முன்னிறுத்தி சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். எனவே கத்தோலிக்க சமயம் சார்பாக கட்சியாக அல்லது சுயேட்சையாக தேர்தலில் போட்டியிடுவது மன்னார் மறை மாவட்டத்தின் கொள்கை அல்ல என மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மன்னார் மறைமாவட்ட இறை மக்களுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை எழுதியுள்ள தவக்காலத் திருமடலில் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மடலில், இந்த நாட்டு மக்களாகிய நாம் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை எதிர் நோக்கி இருக்கிறோம். இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களாகிய எமக்கு இருக்கும் முக்கியமான அரசியல் பலம் எமது வாக்களிக்கும் உரிமைதான்.

முன்னெப்போதும் இல்லாதவாறு தமிழ் மக்களின் அரசியல் களம் இன்று குழம்பிப் போயுள்ளது.

இந்த நிலையில் மிகுந்த ஞானத்தோடும், நிதானத்தோடும் நாம் இந்தப் பொதுத் தேர்தலை சந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

சமய அடிப்படையில் கட்சியாகவோ, சுயேட்சையாகவோ தேர்தலில் போட்டியிட முனைவது எதிர்காலத்தில் பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

இது இன்று ஆட்டம் கண்டுள்ள தமிழர் ஒற்றுமையை இன்னும் அதிகமாக சிதைத்து சின்னாபின்னமாகி விடும்.

இன்றைய சூழ்நிலையில் நாம் உணர்ச்சிபூர்வமாக சிந்திக்காமல் அறிவு பூர்வமாக சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

கத்தோலிக்க மக்களாகிய நாம் நாட்டு நலனையும் நமது இனத்தின் நலனையும் முன்னிறுத்தி சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

எனவே கத்தோலிக்க சமயம் சார்பாக கட்சியாக தேர்தலில் போட்டியிடுவது மன்னார் மறை மாவட்டத்தின் கொள்கை அல்ல என்பதை தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இலங்கை நாட்டின் திருத்தூதரான தூய ஜோசப் வாஸ் அடிகளாரின் பரிந்துரை நமக்கு கிடைப்பதாக.

நமது மறைமாவட்டத்தின் பாதுகாவலி ஆகிய மடு அன்னை நம்மோடு பிரசன்னமாக இருந்து தாய்க்குரிய பாசத்தோடு நம்மை வழி நடத்துவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (9-285)

# உதவி வழங்கல்





(முறிகண்டி)
கிளிநொச்சி மாவட்ட சர்வமத நல்லிணக்க குழுவினரின் கலந்துரையாடல் கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் நல்லிணக்க குழுவினரால் கிளிநொச்சியிலுள்ள 30 வறிய குடும்பங்களிற்கு நிவாரண பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (9-100)

# கதிரைகள் மீதுள்ள பற்றாலேயே புதிய கட்சிகள் உருவாகின்றன-சார்ள்ஸ்

(நெளுக்குளம்)
கதிரைகள் மீதான பற்றே இன்று புதிய கட்சிகள் உருவாக காரணமாகின்றதே தவிர வேறெதுவும் இல்லை என முன்னாள் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றுத்தலைமை என இன்று பலர் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு வருவார்கள். அவர்கள் தமிழ்த் தேசிய நலன் சார்ந்த விடயங்களுக்காக கட்சிகளை உருவாக்கவில்லை. மக்கள் நலனுக்காகவும் கட்சிகளை உருவாக்கவில்லை. அவர்கள் கதிரைகள் மீது உள்ள பற்றின் காரணமாகவே கட்சிகளை உருவாக்கினார்கள்.

தமிழர்களின் நிரந்தரமான தீர்வுக்கு அரசியல் அமைப்பு மாற்றம் என்பது அவசியமானதாகும். அதன் மூலம் தான் தமிழர்கள் முன்னுள்ள பிரச்சினைகளுக்கு 80 வீதமான தீர்வு கிடைக்கும். வடக்கு-கிழக்கு தமிழர்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசமாக இருந்தது. ஆனால் இன்று தமிழர்களது இனவிகிதாசாரத்தினை குறைக்கும் அளவிற்கு சிங்கள குடியேற்றங்கள் வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு அவர்கள் கையாளும் தந்திரம் மகாவலி திட்டமாகும்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழரசுக்கட்சி 100 வீதம் சரியாக செயற்பட்டது என்று நான் கூறவில்லை. ஆனால் மக்களுக்கு உண்மையாக இருக்கின்றது. தமிழ் இனத்தின் அடையாளத்திற்காக கொள்கை ரீதியாக தனித்துவமாக பயணிக்கின்றோம். மக்கள் நலன் சார்ந்த முடிவுகளை நாங்கள் சிந்தித்து கட்சியாக எடுத்திருக்கின்றோம். இதனால் விலை பேச முடியாத சக்தியாக இருக்கின்றோம்.

எம்மில் பலரது கருத்துக்கள் மக்களுக்கு கவலையை ஏற்படுத்துவதாக இருந்தாலும் அது அவர்களது தனிப்பட்ட கருத்துக்களேயாகும்.

அது கூட்டமைப்பின் கருத்துக்கள் இல்லை. அவர்களின் கருத்துக்களை வைத்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர்களை ஒதுக்கிவிடக் கூடாது என மேலும் தெரிவித்தார். (9-299)

# துணுக்காய் கல்வி வலயத்தில் தரம் ஒன்றில் இணையும் மாணவர்களின் வீதம் குறைவு

(கண்டாவளை)
முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த ஐந்து ஆண்டுகளாக 600 வரையான மாணவர்களே தரம் ஒன்றில் இணைந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ளடங்குகின்ற பகுதிகளில் பதினையாயிரம் வரையான குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வருகின்றன.

கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்த இப்பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் தமிழகத்திலும் மாவட்டத்திற்கு வெளியேயும் வாழ்ந்து வரும் நிலையில் தற்போது பதினையாயிரம் வரையான குடும்பங்களே மீள்குடியேறியிருக்கின்றன.

இந்தநிலையில் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள 61 வரையான பாடசாலைகளில் தரம் 1 இற்கு மாணவர்கள் இணையும் வீதம் குறைவாகவே காணப்படுகின்றது. அதாவது இவ்வாண்டில் 618 மாணவர்கள் தரம் ஒன்றில் இணைந்துள்ளனர்.

இதேபோல கடந்த 2016ஆம் ஆண்டில் 687 மாணவர்களும் 2017ஆம் ஆண்டில் 638 மாணவர்களும் 2018ஆம் ஆண்டில் 614 மாணவர்களும் 2019ஆம் ஆண்டில் 629 மாணவர்களும் தரம் ஒன்றில் இணைந்துள்ளதாக வலயக் கல்வித் திணைக்கள தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. (9-315)






யாழ்ப்பாணம் சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் உற்சவத்தை முன்னிட்டு வருடாந்தம் நிகரை இந்து இளைஞர் மன்றத்தினரால் வழங்கப்படும் அறக்கொடை வழங்கும் நிகழ்வில் இம்முறை கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சிவசங்கர் தர்சா, யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ப.சுதர்மினி ஆகியோருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஆலய பரிபாலன சபையினர், நிகரை இந்து இளைஞர் மன்றத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்: கண்டாவளைச் செய்தியாளர்)

# முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை





(முல்லைத்தீவு)
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நினைவிடத்தில் நேற்று முன்தினம் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் பிதிர்க்கடன் தீர்க்கும் நிகழ்வும் இடம்பெற்றது.


மட்டக்களப்பைச் சேர்ந்த இந்துமதக் குருக்களும் மட்டக்களப்பைச் சேர்ந்த தனவந்தர் ஒருவரும் இணைந்து இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் பிதிர்க்கடன் தீர்க்கும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பதினோராவது ஆண்டு ஆரம்பித்திருக்கின்ற நிலையில் இவ்வருடம் குறித்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நினைவிடத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெற்றது.

ஆத்மசாந்தி பிரார்த்தனையைத் தொடர்ந்து பிதிர்க்கடன் தீர்ப்பதற்காக மக்கள் மற்றும் குருமார்கள் அனைவரும் இணைந்து முள்ளிவாய்க்கால் கடற்கரையில் பிதிர்க்கடன்களை தீர்த்தனர். தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடத்தில் அன்னதானமும் மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (9)




## புற்றுநோய் பாதித்த 7 வயது இந்தியச் சிறுவனின் ஆசையை நிறைவேற்றிய டுபாய் இளவரசர்



(டுபாய்)

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் 7 வயது இந்தியச் சிறுவனின் நெடுநாள் ஆசையை டுபாய் நாட்டின் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் நிறைவேற்றி வைத்தார்.

இந்தியாவின் தெலுங்கானா மாநிலத் தலைநகரான ஐதராபத்தைச் சேர்ந்த முஹம்மது தஜாமுல் ஹுசைன் என்பவர் டுபாயில் தொழில் செய்தவாறு தனது மனைவி, பிள்ளைகளுடன் அங்கேயே வாழ்ந்து வருகிறார். இவரது 7 வயது மகன் அப்துல்லாவுக்கு கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கழுத்தில் தோன்றிய ஒரு கட்டி, நாளுக்குநாள் வேகமாக வளர்ந்து பெரிதாகிக் கொண்டே போனது.

வைத்தியர்கள் நடத்திய 'பயாப்சி' பரிசோதனையில் அது புற்றுக்கட்டி என்பது உறுதிப்படுத்தப்பட்டது. கட்டியினால் ஏற்பட்ட வலி, வேதனை மற்றும் 'கீமோதெராபி' சிகிச்சை ஆகியவற்றால் அப்துல்லாவால் பள்ளிக் கல்வியை தொடர இயலவில்லை.

இதனால் வீட்டில் ஓய்வாக இருந்த வேளைகளில் 'யூடியூப்' வலைத்தளத்தில் காணொலிகளைப்பார்ப்பதில் அப்துல்லா ஆர்வம் காட்ட ஆரம்பித்தான். இந்த காணொலிகளில் டுபாய் நாட்டின் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் பற்றிய சில தொகுப்புகள் அவனை வெகுவாகக் கவர்ந்திழுத்தன.

நாளடைவில், பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தானின் தீவிர விசிறியாக மாறிப்போன அப்துல்லா, அவரை எப்படியாவது ஒருமுறை நேரில் சந்திக்க வேண்டும் என்னும் தனது பேரார்வத்தை பெற்றோரிடம் தெரிவித்திருந்தான்.

இந்தத் தகவல் சில ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் மூலமாக பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் கவனத்துக்குச் சென்றது. தற்போது புற்றுநோயின் மூன்றாம் நிலை தாக்கத்துக்கு உள்ளாகி இருக்கும் இந்தியச் சிறுவன் அப்துல்லாவை சந்திக்க அவர் உடனடியாக விருப்பம் தெரிவித்தார்.

இதையடுத்து, கடந்த வெள்ளிக்கிழமை பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் வாழும் அரண்மனைக்கு தனது பெற்றோருடன் சென்ற அப்துல்லா அவரை ஆரத்தழுவி, அவருடன் பேசிச் சிரித்து மகிழ்ந்தான். (ஐ-2)

## சீனாவை உலு

## உயிரிழப்பு 311

(பீஜிங்)


**சீனாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மேலும் 22 பேர் பலியானதையடுத்து, நாடு முழுவதும் பலியானோர் எண்ணிக்கை 3119 ஆக உயர்ந்துள்ளது.**

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் இருந்து பரவத் தொடங்கிய ஆட்கொல்லி கொரோனா வைரஸ், சீனா மட்டுமின்றி உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. சீனாவில் மிகப் பெரிய மனித பேரழிவை ஏற்படுத்தி உள்ள இந்த நோய், சீனாவுக்கு வெளியே சுமார் 90 நாடுகளில் பரவி உள்ளது.

சீனாவில் கொரோனா வைரஸ் 31 மாகாணங்களுக்கு வேகமாகப் பரவியது. இந்த வைரஸால் தினமும் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்புட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கொரோனாவை கட்டுப்படுத்த முடியாததால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் கூடிக் கொண்டே சென்றது. அதன் பின்னர் கடந்த சில தினங்களாக கொரோனாவின் தாக்கம் குறையத் தொடங்கி உயிரிழப்பு விகிதமும் குறைந்தது. புதிய நோயாளிகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்தது.

இந்நிலையில் சீனாவில் நேற்று முன்தினம் மேலும் 22 பேர் உயிரிழந்தனர். இத



## வான் வழித் தாக்குதலில் அல்-ஷபாப்பின் தளபதி பலி

(மொகாடிசு)

சோமாலியாவில் இடம்பெற்ற வான் வழித் தாக்குதலில் அல்-ஷபாப் என்ற தீவிரவாத குழுவின் சிரேஷ்ட தளபதிகளுள் ஒருவரான பஷீர் மொஹமட் கோர்காப் என்பவர் உயிரிழந்துள்ளதாக பி.பி.சி.செய்தி வெளியிட்டது. கடந்த 2008 ஆம் ஆண்டு பஷீர் மொஹமட் கோர்காப் குறித்த தகவல்களை வெளிப்படுத்தியமைக்காக அமெரிக்கா 5 மில்லியன் டொலர்களை வழங்கியது.

சோமாலியாவில் தீவிரவாதிகளை குறி வைத்து அமெரிக்க அடிக்கடி வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது. இந்நிலையில் இந்தத் தாக்குதல் குறித்து அமெரிக்கா இதுவரை அறிக்கை எதையும் வெளியிடவில்லை.

எனினும் கோர்காபின் குடும்பத்தினர் அவரது மரணத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

சோமாலிய மற்றும் அமெரிக்க இராணுவத்தின் கூட்டு நடவடிக்கையைத் தொடர்ந்து பெப்ரவரி 22 ஆம் திகதி தெற்கு சோமாலிய நகரமான சாகோவில் கோர்காப் கொல்லப்பட்டதாக சோமாலிய அரசு வானொலி சேவைகள் சுட்டிக்காட்டியிருந்தது.

எனினும் சர்வதேச ஊடகங்கள் அவரின் உயிரிழப்பு தொடர்பில் தற்போதே செய்திகளை வெளியிட்டுள்ளதுடன், அந்த தாமதத்திற்கான காரணத்தையும் வெளியிடவில்லை.

ஏனைய தலைவர்களுடனான கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து கோர்காப் அல்-ஷபாபிலிருந்து பிரிந்துவிட்டதாக கடந்த மாதம் சோமாலிய செய்தி ஊடகங்களில் உறுதிப்படுத்தப்படாத தகவல்களையும் வெளியிட்டிருந்தன. அல்-ஷபாப் அல்-கொய்தாவுடன் தொடர்புபட்டுள்ளதுடன் தெற்கு மற்றும் மத்திய சோமாலியாவின் பெரும் பகுதியைக் கட்டுப்படுத்துகிறது.

இது சோமாலியாவுக்கு அயல் நாடான கென்யாவிலும் குண்டு வெடிப்பு சம்பவங்களை நடத்தியுள்ளது. மேலும் குறித்த பகுதியில் மிகவும் ஆபத்தான குழுவாகவும் இது கருதப்படுகிறது.

கடந்த மாதம், அல்-ஷபாப் கென்யா மற்றும் அமெரிக்கப் படைகள் பயன்படுத்திய கென்யாவில் ஒரு தளத்தை தாக்கியுள்ளனர். இந்த தாக்குதலில் மூவர் உயிரிழந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## கூண்டிற்குள் அடைக்க

### போப் க



(வத்திக்கான்)

வத்திக்கானில் இருந்து இணையம் மூலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையை நடத்திய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் கூண்டிற்குள் அடைக்கப்பட்டது போல உணர்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இன்றைய ஏஞ்சலெஸ் பிரார்த்தனை சற்று வித்தியாசமானது. பாப்பரசர் நூலகத்தில் அடைக்கப்பட்டுள்ளார்.

ஆனால் நான் உங்களை பார்க்கின்றேன், நான் உங்களுக்கு அருகில் இருக்கின்றேன் எனப் பாப்பரசர் தெரிவித்தார்.

அண்மைய கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்

## சிரியாவில் கோர விபத்து; 32 பேர் ப

(டமாஸ்கஸ்)

சிரியாவில் எரிபொருள் லொறியும் பேருந்தும் மோதி விபத்துக்குள்ளானதில் 32 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் டமாஸ்களையும் ஹான்ஸ் என்ற இடத்தையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் எரிபொருள் ஏற்றி வந்த லொறி கட்டுப்பாட்டை இழந்த நிலையில் விபத்து ஏற்பட்டது.

அப்போது, அதேவழியாக வந்த இரண்டு சுற்றுலாப் பேருந்துகளின் மீது லொறி மோதிய






# வெளிநாடு



# ...ழுக்கும் கொரோனா

## ...119 ஆக அதிகரிப்பு



...னால் பலி எண்ணிக்கை 3119 ஆக உயர்ந்துள்ளது.

புதிய நோயாளிகளின் எண்ணிக்கை ஜனவரி மாதத்திற்கு பிறகு நேற்று முன்தினம் மிகக் குறைவாக இருந்தது. (ஜ-2)

# ...கப்பட்டது போல உணர்கின்றேன்

## ... கவலை



...களுக்காகவும் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பவர்களுக்காகவும் நான் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளேன் என வழமையாக மக்களைச் சந்திப்பதற்காக பயன்படுத்தும் ஓவிய அறையில் நின்றவாறு பாப்பரசர் தெரிவித்தார்.

இந்த நெருக்கடியான தருணத்தில் விசுவாசத்தின் வலிமையுடன் வாழுங்கள் நம்பிக்கையின் உறுதியுடனும் தர்மத்தின் உற்சாகத்துடனும் வாழுங்கள் எனப் பாப்பரசர் வேண்டுகோள் விடுத்தார்.

பாப்பரசர் தனது உரையின் போது சிரியாவின் வடமேற்கு பகுதியில் இடம்பெறும் மோதல்களை முடிவிற்கு கொண்டுவர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனிதாபிமான நெருக்கடியிலிருந்து எங்களது கவனத்தை திருப்பக் கூடாது என பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதன் பின்னர் அந்த அறையின் ஜன்னல் கதவு சில நிமிடங்கள் திறக்கப்பட்டது. பாப்பரசர் அங்கு காணப்பட்ட மக்களை பார்த்து கையைசத்துள்ளார்.

நீண்ட தூரம் பயணம் செய்து பாப்பரசரிடம் நேரடியாக ஆசீர்வாதத்தை பெற வந்த பலர் பாப்பரசரை நேரில் சந்திக்க முடியாமல் போனமை குறித்து ஏமாற்றம் வெளியிட்டுள்ளனர். (ஜ-2)

# ...லி; 77 பேர் படுகாயம்



...நிலையில் 3 வாகனங்களும் கடுமையாகச் சேதமடைந்தன.

இந்த விபத்தில் பேருந்துகளில் பயணம் செய்த 32 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 77 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களில் தலைநகருக்கு அருகிலுள்ள புனித ஆலயங்களுக்கு வருகைதரும் ஷியைட் ஈராக் யாத்திரிகர்களும் உள்ளடங்குகின்றனர். (ஜ-2)

### கொரோனாவின் உச்சம்

# இத்தாலியில் அதிதீவிரம்

## சீனாவில் குறைவு

(ரோம்)

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா ரைவஸின் பாதிப்புக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 827 ஆக அதிகரித்துள்ள நிலையில் சீனாவில் நோயின் தாக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவத் தொடங்கி 3 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் உலகம் முழுவதும் அதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 827 ஆக உயர்ந்துள்ளது.

ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 976 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 6 ஆயிரத்து 129 பேர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் சீனாவில் நாளொன்றுக்கு நூற்றுக்கணக்கில் உயிரிழப்பு ஏற்பட்டு வந்த நிலையில் தற்போது நோயின் தாக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது. நேற்றைய கணக்கின்படி அந்நாட்டில் நேற்று முன்தினம் 28 பேர் உயிரிழந்தனர்.

ஆனால் அதற்கு அடுத்த இடத்தில் உள்ள இத்தாலியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 366 ஆக உள்ள நிலையில் நேற்று ஒரே நாளில் மட்டும் 133 பேர் மரணித்துள்ளமை அந்நாட்டு மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதேபோல் ஈரானிலும் 194 பேர் உயிரிழந்திருக்கும் நிலையில் ஒரே நாளில் 49 பேர் கொரோனாவுக்கு உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் பெரும்பாலான மாகாணங்களில் கொரோனா பாதிப்பு வேகமாகத் அதிகரித்து வருகிறது. கடற்கரை மாகாணமான ஒரேகான் உள்ளிட்ட 8 மாகாணங்களில் சுகாதார அவசர நிலையை அந்தந்த மாகாண ஆளுநர்கள் பிறப்பித்துள்ளனர். அண்டாரியோ மற்றும் அல்பெர்ட்டா பகுதிகளில் மேலும் 3 பேருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் கனெக்டிகட் மற்றும் மெம்பஸ் பகுதியில் புதிதாக நோயின் தாக்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


கொரோனா பாதிப்பு அதிகம் இருப்பதால் தங்கள் நாட்டு இராணுவத்தினரோ அவர்களின் குடும்பத்தினரோ இத்தாலி மற்றும் தென்கொரியாவுக்குச் செல்ல வேண்டாம் என அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. மொத்தத்தில் அமெரிக்காவில் மட்டும் 22 பேர் உயிரிழந்த நிலையில் 538 பேர் கொரோனாவால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

ஜேர்மனியைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவர் கொரோனா பாதிப்பால் எகிப்தில் உயிரிழந்துள்ளார். இங்கிலாந்தில் மேலும் 67 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 274 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நோயின் தீவிரத் தாக்கத்தின் எதிரொலியாக நோர்வேயுடனான இராணுவ ஒத்திகையை பின்லாந்து இரத்துச் செய்துள்ளது. இதேபோல் போலந்து, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளில் வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருவதால் மக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது. (ஜ-2)

# ஈரானில் கொரோனா தாக்கம் உயிரிழப்பு ஆத்த அதிகரிப்பு

எல்லையை மூடியது ஈராக்



(பக்தாத்)

உலகை ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸால் ஈரானில் மாத்திரம் 194 பேர் இதுவரை இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இப்போது 6,566 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஈரான் நாட்டுடனான எல்லையை ஈராக் அரசு மூடியுள்ளது.

வைரஸ் தோன்றிய சீனாவுக்கு வெளியே நோயால் இறந்தவர்களில் அதிக எண்ணிக்கையில் ஈரான் உள்ளது. ஈரானியர்களின் அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் கியானுஷ் ஜஹான்பூரால், அனைத்து பெரிய கூட்டங்களையும் தவிர்த்து வீட்டில் இருக்குமாறு அறிவிறுத்தினார்.

மேலும், ஐரோப்பிய நாடுகளுக்கான அனைத்து விமான சேவைகளையும் ஈரான் எயார் நிறுவனம் தற்காலிகமாக இடைநிறுத்தியது.

இதேவேளை, இந்நிலையில், கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஈரான் நாட்டுடனான எல்லையை ஈராக் மூடியுள்ளது. எல்லைப் பகுதியில் சுகாதாரப் பணியாளர்கள் நோய்த் தடுப்பு மருந்துகளைத் தெளிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஈராக் அரசின் இந்த நடவடிக்கையால், எல்லையோரப் பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கலாம் என பொதுமக்கள் கவலை தெரிவித்தனர். (ஜ-2)

# மாவீரர்களின் எண்ணங்களைச் சுமந்து நாம் ஒன்றாகப் பயணிக்க வேண்டும்

## கோடீஸ்வரன் கோரிக்கை



(வவுணதீவு)

மாவீரர்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் சுமந்தவர்களாக நாங்கள் ஒன்றாகப் பயணிக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வவுணதீவு காவலரங்கில் வைத்து கொல்லப்பட்ட கணேஷ் தினேஷின் ஒருவருட ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இஸ்லாமிய தீவிரவாதிகளின் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் பொலிஸ் உத்தியோகத்தர் கணேஷ் தினேஷ் போன்ற இளைஞர்களின் உயிர்களைப் காவு கொடுப்பதற்குக் காரணமாக அமைந்தது.

அந்த வகையில் நாங்கள் ஒற்றுமையாக இருந்து செயற்பட வேண்டும். தமிழோடும் தமிழ்த் தேசியத்தோடும் ஒன்றிணைந்து செயற்பட்டு தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதில் பல சக்திகள் பின்னின்று செயற்படுகின்றன. இவற்றுக்கு நாங்கள் தகுந்த பதிலடி கொடுக்கவேண்டும்.

பேரினவாத சக்திகளுக்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டிய ஒரு தேர்தல் களமாக இத் தேர்தல் அமைந்திருக்கின்றது. இந்தத் தேர்தல் காலம் என்பது அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்கின்ற ஒரு தேர்தலாக இருக்கின்றது.

இதில் எமது வாக்குரிமையைச் சிறப்பாகப் பயன்படுத்தி தமிழ்த் தேசியத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பலப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இதன்மூலமே எமது இருப்பை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும். இல்லாவிட்டால் நாங்கள் எங்களது தலையிலே மண்ணை அள்ளிப்போட வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திவிடும்.

கிழக்குத் தமிழ்த் தலைமை என்ற பிரதேசவாத கருத்துக்களைக் கூறி பலர் களமிறங்கி இருக்கின்றனர். வடக்கு-கிழக்கு என்பது எமது தாயகம். எமது கனவு. எமது சின்னம் என்பது எங்களது குறிக்கோளாக இருக்கின்றது.

போராட்ட வரலாறு கூட வடக்கு-கிழக்கு இணைப்பின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது. எமது விடுதலைப் போராட்டம் அவ்வாறே நடைபெற்றிருந்தது. அதனடிப்படையில்தான் இந்த மண்ணிற்கு அதிக அளவிலான மாவீரர்கள் வித்தானார்கள்.

எனவே, மாவீரர்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் சுமந்தவர்களாக நாங்கள் ஒன்றாகப் பயணிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரணிலும் சஜித்தும் இணைந்தால் ஐ.தே.கவின் எதிர்காலம் சிறக்கும்

## இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டு

(கண்டி)

ரணிலும் சஜித்தும் இணைந்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர்கள் இணைய வேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பு எனவும் அவ்வாறு நடைபெறா விட்டால் சஜித் அணியையே ஆதரிக்கவுள்ளதாகவும் சுட்டிக் காட்டிய அவர், நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிட்டால் தமக்கு எந்தப் பாதிப்பும் இல்லையெனவும் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்கப் பிரிவான மலையக மகளிர் முன்னணி நேற்று. முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனது கட்சியின் சர்வதேச மகளிர் தினத்தை ஹற்றனில் கொண்டாடியது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரியவின் மத்தியஸ்தத்துடன் ரணில் தரப்பும், சஜித் அணியும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இது சந்தோசமான தகவலாகும். இருவரும் பிளவுபடாமல் ஐக்கியமாகப் பயணித்தால் அது ஐக்கிய தேசியக் கட்சியின் வளர்ச்சிக்கு பெரும் பலமாக அமையும்.

சிலவேளை, இணைவு சாத்தியமில்லாமல், பொதுத்தேர்தலில் இரு அணிகள் போட்டியிட்டால் தமிழ் முற்போக்குக் கூட்டணியாகிய நாம் சஜித் பக்கமே நிற்போம். அதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. எனவே, இனி முன்வைத்த காலை பின்வைக்க மாட்டோம். எமது மக்களும் சஜித் தலைமையிலான அணிக்கு பேராதரவை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிட்டால் அது தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

அதேவேளை, சட்டம் அனைவருக்கும் சமமாகும். எனவே, பிணைமுறி விவகாரத்தில் ரவி கருணாநாயக்க குற்றம் இழைத்திருந்தால் நிச்சயம் தண்டனை அனுபவிக்க வேண்டும். குற்றம் இழைக்கவில்லையெனில் நீதிமன்றத்தில் முன்னிலையாகி தான் நிரபராதி என்பதை நிரூபித்து விடுதலையாக வேண்டும்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலநறுவை மாவட்டத்துக்கே கூடுதல் வேலைகளைச் செய்தார். அவர் நாட்டுக்காக பெரிதாக எதனையும் செய்யவில்லை. எனவே, தேசிய அரசியலில் இருந்து ஒதுங்கி, பொலநறுவை மாவட்டத்துக்குள்ளேயே அவர் இருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சி

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் தொகையானது 17.7 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

சீனாவின் வுஹானில் தோற்றம் பெற்று சர்வதேச நாடுகளில் வேகமாகப் பரவிவரும் கொரோனாவின் தாக்கமே இதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது.

2019 ஜனவரியில் 244,239 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். எனினும் 2020 ஜனவரியில் 228,434 பேர் மாத்திரம் வருகை தந்துள்ளனர்.

அதேபோல் 2019 பெப்ரவரியில் 252,033 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். எனினும் 2020 ஜனவரியில் 207,507 பேர் மாத்திரம் வருகை தந்துள்ளனர். இது 17.7 வீத வீழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. (ஜ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பார்வை

ஒரு தெருவில் சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு உயரமான கருங்கல்லை நடுத்தெருவிலே வைத்து அதைச் சுற்றிச் சுற்றி ஓடிவந்து கொண்டிருந்தார்கள். அது என்ன விளையாட்டோ அவர்களுக்கே வெளிச்சம்.

சிறிது நேரம் அப்படி விளையாடிக் கொண்டிருந்தார்கள். விளையாடி முடித்ததும் அந்தக் கருங்கல்லை நடுத்தெருவிலே அப்படியே விட்டுவிட்டு அவரவர் வீட்டுக்கு ஓடிப் போனார்கள்.

அதன்பின்னர் அந்த வழியாக இரண்டு பெண்கள் பேசிக்கொண்டு வந்தார்கள். பேச்சு சுவாரஸ்யத்திலே நடுத்தெருவில் இருந்த அந்தக் கல்லைக் கவனிக்கவில்லை. காலில் இடித்து இரத்தம் வந்தது. வலி தாங்க முடியவில்லை. காலில் இடித்துக்கொண்ட பெண் திட்ட ஆரம்பித்தார்.

வரவர ஊரு உலகம் ரொம்பக் கெட்டுப் போச்சு. யாருக்கும் பொறுப்பே கிடையாது. பாரு... இப்படி நடுத்தெருவிலே பொறுப்பில்லாமல் இந்தக் கல்லைப் போட்டு வைத்திருக்கிறார்களே. இது நியாயமா? இப்படிக் கடுமையாக இந்தச் சமூகத்தை விமர்சனம் செய்து கொண்டே அவர்கள் போய் விட்டார்கள்.

சிறிது நேரம் கழித்து ஒரு இளைஞன் அந்த வழியாக வந்தான். அந்தக் கல்லைப் பார்த்தான். நின்றான் ஒரு நிமிடம் யோசித்தான்.

என்ன செய்யலாம் என்று பார்த்தான். தன்னுடைய வீரத்தையும் பலத்தையும் காட்ட வேண்டும் என்று நினைத்தான். சிறிது பின்னால் போனான். வேகமாக ஓடி வந்து ஒரு சின்ன 'ஹைஜம்ப்' அடித்து தாண்டிக் குதித்தான். விசிலடித்துக்கொண்டே போய்விட்டான்.

அடுத்தபடியாக ஒரு காதல் ஜோடி அந்த வழியாக வந்தார்கள். நடுத்தெருவிலுள்ள கல் அவர்கள் கண்ணில் பட்டது. அவர்கள் இரண்டு பேரும் மிகவும் நெருக்கமாக சேர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். நடுவில் கல் இருப்பதாலே சிறிது நேரம் இரண்டு பேரும் விலகி மறுபடியும் இந்தப் பக்கம் வந்து சேர்ந்து போகவேண்டும்.

சிறிது நேரம் நாம் பிரிய வேண்டியிருக்கிறதே என்று வருத்தத்துடன் முணுமுணுத்துக்கொண்டே இந்தப் பக்கம் வந்தார்கள். அதன்பின் வழக்கம்போல சேர்ந்து அவர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி கற்பனை செய்து கொண்டு போய்விட்டார்கள்.

கடைசியாக அந்த வழியாக பார்வையில்லாத ஒருத்தர் வந்து கொண்டிருந்தார். அவர் கையிலே வழக்கமாக வைத்திருக்கின்ற ஊன்றுகோலாலே தனக்கு முன்னால் அப்படியும் இப்படியுமாக தட்டிப் பார்த்துக்கொண்டே அவர் மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தார். வழியில் இருக்கிற அந்தக் கல் தட்டுப்பட்டது.

உடனே நடுத்தெருவிலே ஒரு கல் இருப்பதை அவர் புரிந்து கொண்டார். உடனே குனிந்து அந்தக் கல்லைத் தடவிப் பார்த்து எடுத்து ஒரு ஓரமாக கொண்டு போய்ப் போட்டார். அதன்பின் அவர் அந்த வழியாக நடந்து போனார்.

இப்பொழுது இதிலே பலபேர் வந்தார்கள், போனார்கள். இவர்களில் பார்வை உள்ளவர் யார்? பார்வை இல்லாதவர் யார்? ஒரு ஆள் பார்ப்பதற்கு பெரிய மனிதன் மாதிரித்தான் இருந்தார். ஒரு தெருவழியாக நடந்து வந்து கொண்டிருந்தார். இரவு நேரம் வழியிலே ஒரு பெரிய கல் கிடந்தது. கருங்கல்லைப் பார்த்தார். சிறிது நேரம் யோசித்தார். போய் தூக்கிப் பார்த்தர்ர் மிகவும் பாரமாக இருந்தது.

இன்னொருவர் சேர்ந்தால்தான் தூக்க முடியும். இவர் உடனே வீதியோரமாக போய் ஒரு மரத்தடியிலே உட்கார்ந்து கொண்டார். இரண்டு பக்கமும் பார்த்துக் கொண்டிருந்தார் யாராவது வருகிறார்களா? என்று. சிறிது நேரத்தில் இவருக்குத் தெரிந்தவர் ஒருத்தர் வந்தார். என்ன இந்த நேரத்திலே இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று கேட்டார் அவர். அதோ அந்தக் கருங்கல் என்று அதைச் சுட்டிக்காட்டினார்.

ஓ... அதைத்தூக்கி ஓரமாகப் போடவேண்டுமா? வாங்க இரண்டு பேரும் தூக்கலாம் என்றார் வந்தவர்.


நான் அதற்காக உட்கார்ந்திருக்கவில்லை என்றார் இவர். பின்னர் எதற்காக என்று கேட்டார் அவர். ஒரு மனிதன் கருங்கல்லில் காலை இடித்துக்கொண்டால் எப்படித் துள்ளுவான் என்று பார்ப்பது என் நீண்ட நாள் ஆசை. அதற்காக உட்கார்ந்திருக்கிறேன் என்றார் சேர்.

# கிழக்கிற்கு கொரோனாவை கொண்டு சேர்ப்பிப்பதில் மறைமுக நோக்கம் இருப்பதாக மக்கள் சந்தேகம்

## முன்னாள் முதலமைச்சர் நஷீர் வெளிப்படுத்தல்

(ஏறாவூர்)

**கிழக்கிற்கு கொரோனாவைக் கொண்டு சேர்ப்பிப்பதில் ஏன் அரசிற்கு இத்தனை ஆர்வம். இதன் பேரில் மறைமுக நோக்கம் இருப்பதாக மக்கள் சந்தேகிப்பதில் நியாமிருக்கிறது என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தின் ஆலிம் நஷீர் அஹமட் தெரிவித்தார்.**



மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தை கொரோனா (கொவிட் 19) சிகிச்சை நிலையமாக மாற்றுவது குறித்த அரசின் முன்னெடுப்புக்களையிட்டு அவர் கிழக்கு மக்கள் சார்பாக தனது எதிர்ப்பை வெளியிட்டார்.

இது தொடர்பாக நேற்று திங்கட்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக விவகாரம் ஏற்கனவே இனவாத சிந்தனை நெருக்குவாரங்களால் சர்ச்சைக்குரிய தொன்றாக மாறிவிட்டிருக்கும் சூழ்நிலையில் தற்போது அந்த விவகாரத்தை திசை திருப்பும் வண்ணம் மட்டக்களப்பு பல்கலைக்கழக வளாகத்தை சுவீகரித்து கொரோனா நோயாளிகளுக்கான சிகிச்சை நிலையமாக மாற்றும் தீர்மானத்தை அரசு முன்னெடுத்துள்ளது.

இலங்கையில் ஒதுக்குப் புறமான பொதுமக்களுக்கும் இயற்கைக்கும் கேடு விளைவிக்காத பல இடங்கள் இருக்கும்போது ஏன் சன அடர்த்தி மிக்க இடத்தை அதுவும் முஸ்லிம்கள் வாழும் ஊர்களை மையப்படுத்தியதாக கொரோனா சிகிச்சை நிலையத்தை அரசு வலிந்து உருவாக்க வேண்டும்? இதில் மறைமுக நிகழ்ச்சி நிரலும் சூழ்ச்சிகளும் இருப்பதாக மக்கள் அச்சம் கொள்வதில் நியாமிருக்கிறது.

இந்தப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலையை அண்டிய எந்நேரமும் சன நடமாட்டமுள்ள பிரதேசமாகும். அது ஒரு புறமிருக்க கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நோயாளியும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அப்படியெனில் ஏன் அரசு கிழக்கை மையப்படுத்தி கொரோனா சிகிச்சை நிலையத்தை அமைக்க வேண்டும்.

எந்த விடயங்களும் விஞ்ஞானபூர்வமான ஆய்வின் அடிப்படையமின்றி இனவாதக் கண்ணோட்டத்துடன் அனுகப்படுமாயின் அது இனவாதிகளுக்குத் தோல்வியிலேயே முடியும்.

கொழும்பின் புறநகரான வத்தளை பகுதியிலுள்ள தொற்று நோய் வைத்தியசாலையொன்றை கொரோனா வைரஸ் தொற்று நோய் ஆய்வு மத்திய நிலையமாக மாற்றும் அரசின் நடவடிக்கைகளுக்கு பிரதேச மக்கள் ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த நான்கு தினங்களாக இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வத்தளை பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் ஆய்வு மத்திய நிலையமொன்று அமைக்கப்படுகின்றமையினால், தாம் பல்வேறு சுகாதார அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, மட்டக்களப்பிலும் இதுபோன்ற எதிர்ப்புகளை நடத்த மக்கள் முனையலாம்.

ஏற்கனவே மட்டக்களப்பு நகரை அண்டியுள்ள மாந்தீவை கொரோனா வைரஸ் தொற்று நோய் ஆய்வு நிலையமாக மாற்றுவதற்கு எடுத்த நடவடிக்கைகளை தமிழ் அரசியல்வாதிகளும் மக்கள் அமைப்புக்களும் பலமாக எதிர்த்ததன் காரணமாக அந் நடவடிக்கையை அரசு கைவிட்டு தற்போது மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்தை அரசு குறிவைத்து நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அந்தப் பல்கலைக்கழக வளாகத்தை அண்டிய கிராமங்கள் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களாக இருந்தாலும் கொரோனா வைரஸ் கிருமி இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் பார்த்து தொற்றிக் கொள்வதில்லை என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

எந்தக் கோணத்தில் பார்த்தாலும் இது அரசின் ஏற்புடைய நடவடிக்கை அல்ல" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ)

# மட்டக்களப்பு பல்கலைக்கழகம் கொரோனா தனிமைப்படுத்தல் மையமாக மாற்றப்படவில்லை



(ஏறாவூர்)

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களை மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்திற்கு அழைத்துச் சென்று சோதனை செய்யவுள்ளதாக வெளியாகும் தகவல்கள் பொய்யானவை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். மட்டக்களப்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களை மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்திற்கு அழைத்துச் சென்று சோதனை செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவை பொய்யான தகவல்கள் என்றே நான் கருதுகின்றேன். இதற்கு அரசாங்கம் பதில் வழங்கும் என எதிர்பார்க்கின்றேன். கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் வீதம் இலங்கையில் மிகவும் குறைவு.

இவ்வாறான நிலையில், இந்தச் செய்தி தேர்தலுக்காக பரப்பப்பட்ட வதந்தி என்றே நான் பார்க்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோர விபத்தில் 6 பேர் பலி மூவர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

லுனுகம்வெஹர பகுதியில் வான் ஒன்று கட்டுப்பாட்டையிழந்து வீதியின் ஓரத்தில் நின்ற மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்ததுடன், மேலும் மூவர் காயமடைந்தனர்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் அதிகாலை 1.45 மணியளவில் இடம்பெற்றது.

மாத்தளையிலிருந்து கதிர்காமம் நோக்கிச் சென்ற வான் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்தவர்கள் தேபராவெவ மற்றும் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



சுனாமி ஒத்திகை நிகழ்வுகள் பருத்தித்துறை கடற்கரைப்பகுதியில் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது. (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் 11ம் திகதி முதல் 17ம் திகதி வரை

(கொழும்பு)

தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று 24 மாவட்டங்களை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளை 11 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் அனைத்துப் பிரதேசங்களிலும் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.


பொலிஸ், கடற்படையின் ஒத்துழைப்புடன் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் அருண ஜெயசேகர தெரிவித்தார்.

மழையுடனான காலநிலை இல்லாமையால் டெங்கு நோய் பரவும் வீதமும் குறைவடைந்தது. இருப்பினும் மழைக் காலங்களில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஒரு வாரத்திற்கு இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

16

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



2017 ஆம் ஆண்டில் மேலும் பல நிதிமூலங்களுடான புதிய திட்டங்கள் உள்வாங்கப்படவுள்ளன.

**ஜப்பான் அரசின் ரூபா 3,200.00 மில்லியன் உதவியினூடான திட்டம்** - இத்திட்டமானது ஐந்து ஆண்டு களை கொண்டதாகும் (2016-2020). கிராமிய வீதிகள், நீர்ப்பாசன வசதிகள், சிறந்த குடிநீர் வசதிகள் ஆகிய திட்டங்களை உள்ளடக்கியதாக இத்திட்டம் அமுல்படுத்தப்படும்.

**ஒருங்கிணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தித்திட்டம்** - 683.02 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

உலக வங்கியின் நிதியீட்டத்தின் கீழ் 1,000 கிராமிய பாலங்களை அமைக்கும் திட்டத்தில், வடமாகாணத்தில் 87 பாலங்கள் அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

விவசாயத்துறையினை நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 25.0 மில்லியன் மதிப்பீட்டில் ஐந்து ஆண்டுத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூபா 20.0 மில்லியன் தொகையில் வடமாகாணத்தில் நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் நிறுவனங்களின் இயலளவை அபிவிருத்தி செய்தல் எனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வினைத்திறனுடன் நடவடிக்கையை முன்னெடுப்போம். எனவே வரவு-செலவுத் திட்டத்தின் மூலமான நிதி ஏற்பாடுகளுக்கமைய சிறந்தமுறையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை பயனுறுதிமிக்கதாகவும், வினைத்திறனுடையதாகவும் நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும். வரும் புத்தாண்டில் கூடிய வினைத்திறனுடன் எமது நடவடிக்கைகளைக் கொண்டு நடத்த யாவருடைய ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

உறுப்பினர்கள் பல தேவைகளை வலியுறுத்தி வருகின்றார்கள். அவை மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவன. முதலமைச்சரின் அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பின்னர் ஆராயப்படும் என மேலும் தெரிவித்தார்.

### மாகாண அரசிறைப்பகுப்பாய்வுப்பிரிவு

மக்களிற்கு வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் சேவையாற்றுவதற்கு தாபன நடைமுறைகள், நிதிப்பிரமாணங்கள், சுற்றுநிருபங்கள், வழிகாட்டுதல்கள் உறுதுணையாய் உள்ளன. இருப்பினும் அலுவலகங்களில் இவற்றைக் கடைப்பிடிப்பதில் ஏற்படும் தவறுகள் காரணமாக மக்களின் எதிர்பார்ப்புகள், தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதில் தடங்கல்கள் நேரிடுகின்றன.

இத்தடங்கல்கள் தொடர்பில் கணக்காய்வுத்திணைக்களத்தால் ஐய வினாக்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. இருப்பினும் தவறுகள் தொடர்வதை கருத்திற்கொண்டு அரசாங்கக் கணக்குகள் குழுவால் 2015 ஆம் ஆண்டிலிருந்து முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கி இணையவழியில் தரக்கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு நிறுவனங்களின் நிதி முகாமைத்துவத்தின் தரம் வெளிக்கொணரப்படுவதன் மூலம் மக்களிற்கான உன்னத சேவை வழங்கப்படுதல் ஊக்குவிக்கப்படுகிறது.

வடமாகாணத்தில் நிதிமற்றும் அரசிறை முகாமைத்துவத்தை வலுவூட்டும் வகையில், உலக வங்கியின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஒரு முன்னோடி நடவடிக்கையாக, மாகாண அரசிறைப்பகுப்பாய்வுப்பிரிவு 2016 இல் நிறுவப்பட்டது.

அரசிறைப் பகுப்பாய்வுப் பிரிவின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருவனவாகும்,

● முன்னுரிமை வழங்க வேண்டிய தேவைகளை அடையாளம் காண்பதும் வடமாகாணத்திற்கான வருமான உருவாக்க வழிகளிலான தலையீடும்.

● மாகாணத்தில் வினைத்திறனுள்ள இறைவரி முகாமைத்துவத்தை உறுதி செய்வதற்கான செயலாற்றுகைக் கண்காணிப்புச் சட்டகம் ஒன்றினை விருத்தி செய்தல்.

● வினைத்திறனுள்ள இறைவரி முகாமைத்துவத்திற்கு உதவுவதற்கேற்ப சான்று அடிப்படையிலான ஆய்வுகளை மேற்கொள்ளல்.

இதற்கமைய, வட மாகாண்த்தின் நிதி விடயத்திற்குப் பொறுப்பான பிரதிப் பிரதம செயலாளர் பணிமனை மாகாணத்தின் இறைவரி முகாமைத்துவத்தை முன்னேற்றுவதற்கான நான்கு முக்கிய விடயங்களை அடையாளம் கண்டது. அவை கீழே தரப்பட்டுள்ளன.

1. நிறுவன ரீதியான ஒழுங்கு
2. வருமான செலவு முகாமைத்துவம்
3. ஆய்வு மற்றும் கழிவு முகாமைத்துவம்
4. சான்று அடிப்படையிலான கொள்கை உருவாக்கம்

இறைவரிப் பகுப்பாய்வுப்பிரிவின் குறிக்கோள்களை அடைவதற்கு "ஆசிய மன்றம்" அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் வர்த்தகத் திணைக்களத்தினால் நிதியளிக்கப்படும் "உபதேசிய ஆட்சித்திட்டத்தின்" கீழ் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்கியது.

தற்போது "அரசிறைப்பகுப்பாய்வுப்பிரிவு" தனது குறிக்கோள்கள்ள அடைவதற்காகப் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. வடமாகாண சபையின் அரசியல் தலைமைத்துவத்தின் ஆசியுடன் பிரதம செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் நிதி விடயத்திற்குப் பொறுப்பான பிரதிப்பிரதம செயலாளரால் வழி நடத்தப்படுவதும் அரசிறைப் பகுப்பாய்வுப் பிரிவினால் நிறைவேற்றப்படுவதுமான இன்னொரு முக்கிய நடவடிக்கையே வட மாகாண சபையிலுள்ள நிறுவனங்களின் நிதிசார் செயலாற்றுகை மதிப்பீடு ஆகும். வட மாகாண சபையின் அமைச்சர்சபை இந்நடவடிக்கையை வருடாந்த அடிப்படையில் தொடர்வதற்கான அனுமதியை ஏற்கனவே வழங்கியுள்ளது. அரசிறைப்பகுப்பாய்வுப்பிரிவின் இம் முன்னோடி நடவடிக்கை வட மாகாண சபையின் கீழுள்ள 66 நிறுவனங்களின் நிதிசார் நடவடிக்கைகளது செயலாற்றுகை தொடர்பில் முக்கியமாகப் பதிவேடுகளைப் பேணுதலிலும் அறிக்கையிடுதலிலுமான செயலாற்றுகை பற்றிய விளக்கம் ஒன்றினை வழங்கியுள்ளது. குறித்த 66 நிறுவனங்களினதும் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்குப் பதினாறு முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த பகுப்பாய்வுப்பிரிவு வடமாகாணத்தின் திறைசேரியின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்களை மீளாய்வு செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்தது. அதன் அடிப்படையில் முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகளை உருவாக்கி அனைத்து மாகாண சபையைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிலும் 2017 ஆம் ஆண்டின் நிதியாண்டுக்கான நிதி முகாமைத்துவ மதிப்பீட்டினைச் செய்தது.

இதற்கமைய வடமாகாணத் திறைசேரி பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்காக வடமாகாண சபையின் கீழான அமைச்சுகள்.

விசேட செலவின அலகுகள், திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்கான முதன்மைச்செயலாற்றுகை சுட்டிகளை உருவாக்கியது.

● நிதி நடவடிக்கைகளின் பயன்வின்ள தன்மையை அளவிடுதல்.

● வெளிப்படு விளைவினை விருத்தி செய்வதிலான செம்மைத்தன்மை, நடைமுறைகளின் பயன்விளை தன்மையின் பிரதிபலிப்பு என்பவற்றை அடையாளம் காணல்.

● மாற்றம் ஒன்றின் விளைவுகளை நம்பகத்தன்மையுடனும் திரும்பத் திரும்பவும் செம்மையாகவும் கண்காணித்தல்

● நடவடிக்கைகளின் விளைவுகளை நெருக்கமாகக் கண்காணித்தல்

● சாத்தியமுள்ள தவறுகளைக் கண்டறிந்து முன்னேற்றுதல்

● நடைமுறையிலுள்ள செயற்பாடுகளின் தரத்தினை உயர்த்துதல்

மேலுள்ள குறிக்கோள்களின் அடிப்படையில் வடமாகாணத்திலுள்ள ஏனைய பங்குதாரர்களுடனான கலந்துரையாடலின் மீது கீழ்க்குறிப்பிடப்படும் முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகள் உருவாக்கப்பட்டன.

1. கட்டாயமாக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் தயாரிப்பும் முன்னளித்தலும்.
2. வருடாந்தக் கணக்குகளின் முன்னளிக்கை.
3. காலாண்டுக்கான கணக்குகளும் அறிக்கைகளும்.
4. மாதாந்தக் கணக்குகளும் அறிக்கைகளும்.
5. பதிவேடுகள் பேணுதல்.
6. அதிகாரக் கையளிப்பு.
7. மாகாண உள்ளகக் கணக்காய்வு.
8. பொதுக்கணக்காய்வு.
9. கணக்காய்வு அபிப்பிராயங்கள்.
10. நிலையான சொத்துகள்,பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதான கட்டுப்பாடு.
11. நாளாந்தம் பயன்படும் களஞ்சியப் பொருட்கள் மீதான கட்டுப்பாடு.
12. களஞ்சியக் கட்டுப்பாடு.
13. வங்கிக் கணக்கிணக்க முறைமைகள்.
14. கட்டுநிதிக் கணக்கிணக்கம்.
15. வாகனப் பராமரிப்பு.
16. ஏனைய முக்கிய நடவடிக்கைகள்.

முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகளதும் உப முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகளதும் அடிப்படையில் ஒவ்வொரு நிறுவனமும் உள்ளூராட்சி மன்றமும் தம்மைத் தாமே சுய மதிப்பீட்டுக்கு உட்படுத்தின. அதனையடுத்து ஒரு பிரதம கணக்காளர் அல்லது கணக்காளர் தலைமையில் மற்றும் பதவி நிலை அலுவலர்களைக் கொண்ட மூவர் குறித்த நிறுவனங்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் நேரடியாகச் சென்று மதிப்பீட்டினை உறுதிப்படுத்தினர்.

இறுதியாக மதிப்பீட்டுப் புள்ளிகள் பிரதம செயலாளராலும் பிரதிப் பிரதம செயலாளர்களாலும் 2017 ஆம் நிதி வருடத்தில் மிகச்சிறந்த மற்றும் உயர் நிதிச்செயற்பாடுகளை ஆற்றிய மாகாண சபை நிறுவனங்களையும் உள்ளூராட்சி மன்றங்களையும் தெரிவு செய்வதற்காக உறுதி செய்யப்பட்டன.

இதற்கமைய, மூன்று மாகாண அமைச்சுக்கள், ஆறு விசேட செலவின அலகுகள், ஏழு திணைக்களங்கள் மற்றும் நான்கு நகரசபைகள், ஆறு பிரதேச சபைகள் 2017 ஆம் ஆண்டில் சிறந்த நிதிச் செயற்பாடுகளை எட்டியுள்ளன. இதன்படி வடமாகாணத்தில் 32 மாகாண சபை நிறுவனங்களில் ஐம்பது வீதமானவற்றிலும் 34 உள்ளூராட்சி மன்றங்களின் முப்பது வீதமானவற்றிலும் நிதிச் செயற்பாடானது மிகத்திருப்திகரமான நிலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

66 நிறுவனங்களுக்குமான 16 முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகளையும் கருத்திலெடுக்கையில் ஒரு முதன்மைச்செயலாற்றுகைச்சுட்டிக்கான சராசரிப் பெறுமதி **77.10%** ஆக அமைகிறது. ஒவ்வொரு முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகளுக்குமான பெறுமதி வரைபு 1 இல் தரப்பட்டுள்ளது. இதன் பிரகாரம்

● 'கணக்காய்வு அபிப்பிராயம்" எனும் முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டியே மிகக் குறைந்த பெறுமானம் ஆன **32.44%** இனைப் பெற்றுள்ளதுடன் முன்னேற்றத்திற்கான மிகக் கூடிய கரிசனையை நாடி நிற்பதுமாகும்.

● ஏழு முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகள் (கணக்காய்வு அபிப்பிராயம், வருடாந்த கணக்கறிக்கைகளை சமர்ப்பித்தல், ஏனைய முக்கிய விடயங்கள், உள்ளகக் கணக்காய்வு, காலாண்டு கணக்குகள் அறிக்கைகள், மாதாந்தக் கணக்குகள் அறிக்கைகள், பொதுக்கணக்காய்வு ஆகியன) சராசரிப் பெறுமதியிலும் பார்க்கத் குறைந்த பெறுமதியைப் பெற்றுள்ளன. இம் முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகளின் பெறுமதி அதிகரிக்கையில் அது முழுமையான சராசரிப் பெறுமதியையும் முன்னேற்றும்.

(தொடரும்)

# வெகுவிரைவில் பிணைமுறி மோசடியின் முக்கிய சூத்திரதாரி கைது செய்யப்படுவார்

## அஜித் நிவாட் கப்ரால் திட்டவட்டம்

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய முக்கிய தரப்பினரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உட்பட 10 பேரை கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இந்த மோசடியின் முக்கிய சூத்திரதாரி கைது செய்யப்படுவார் என முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.



2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 மற்றும் 31 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பிணை முறி விநியோகத்தின் போது மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக பதரப்பட்ட விசாரணை மற்றும் குழு அறிக்கைகளின் ஊடாக அறிந்து கொள்ள முடிந்துள்ளது.

இந்த வேளையில் நிதிய மைச்சராக முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் ரவி கருநாணாயக்க பதவி வகித்தார். அர்ஜுன அலோசியசுடன் கொண்டிருந்த தொடர்பு, மத்திய வங்கியின் ஆளுநராக சிங்கப்பூர் நாட்டு பிரஜை நியமிக்கப்பட்டமை ஆகிய விடயங்கள் அனைத்தும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளன.

பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உட்பட பலதரப்பட்ட குழுக்களினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் பிரதான தடையாக செயற்பட்டது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பான விசாரணைகளுக்கு தடைகளை ஏற்படுத்தினார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாக குறிப்பிட்டார்.

அரசாங்கம் ஆட்சியமைத்து 3 மாத காலத்திற்குள் தற்போதே பிணைமுறி விவகாரத்திற்கு முதற்கட்ட சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உட்பட 10 பேரை கைது செய்யுமாறு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித அரசியல் நோக்கமும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மலையக பல்கலைக்கான நிதி அடுத்த வரவு-செலவுத்திட்டத்தில்

## வாக்குறுதிப்படி ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்



(ஹற்றன்)

மலையகத்துக்கான பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான நிதி அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிப்படி, தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

மலையக பல்கலைக்கழகம் அமையவுள்ள இடத்தைத் தெரிவு செய்வதற்காக ஹற்றனுக்கு நேற்று திங்கட்கிழமை கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட உயர்கல்வி அமைச்சர், தனது பணிகளை முடித்துக்கொண்டு ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மலையகப்-பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உயர் கல்வியைத் தொடரக்கூடிய வகையில் பல்கலைக்கழகமொன்று அமைக்கப்படும் என ஜனாதிபதித் தேர்தலின்போது நுவரெலியா மாவட்டத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்திருந்தார்.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் கோரிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பல்கலைக்கழகம் அமையவுள்ள இடத்தைப் பார்வையிடுவதற்காகவே கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டேன்.

இதன்படி கொட்டகலையிலுள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம், பல்கலைக்கழக கல்லூரியாகத் தரமுயர்த்தப்படும். அதேபோல் கொட்டகலையில் சகல வசதிகளையும் கொண்ட பல்கலைக்கழகமொன்றும் அமைக்கப்படும். அமைச்சரவை அனுமதி பெறப்பட்டு, அடுத்தாண்டுக்கான பாதீட்டில் நிதி ஒதுக்கப்படும்.

பொறியியல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் உட்பட முக்கிய விடயங்களை அங்கு கற்று, கண்டுபிடிப்பாளர்களாகவும், நிர்மாணிப்பாளர்களாகவும் மாறுவதற்கான வாய்ப்பு தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இதன்மூலம் கிடைத்துள்ளது. சுதந்திரத்துக்குப் பின்னர் மலையக மக்களுக்கு கிடைக்கும்சிறப்பான தொரு வரப்பிரசாதம் இதுவாகும்.

நாட்டிலுள்ள கல்வியியல் கல்லூரிகள் பல்கலைக்கழக தரத்துக்கு தரமுயர்த்தப்படும் என ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். இதன்படி ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியும் தரமுயர்த்தப்படும். அங்கு தற்போது டிப்ளோமாவே வழங்கப்படுகின்றது.

அடுத்தாண்டு முதல் கல்வி தவணைக்காலம் ஓராண்டு அதிகரிக்கப்பட்டு, பட்டம்வழங்குவது தற்கு ரிய நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிப்படி தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை இந்தியா பரிசீலிக்கும்

## எச்.ராஜா தெரிவிப்பு



(சென்னை)

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளுக்கு இரட்டை குடியுரிமை வழங்குவது தொடர்பாக இந்திய அரசாங்கம் பரிசீலிக்கும் என பாரதிய ஜனதா கட்சியின் தேசியச் செயலாளர் எச்.ராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தூத்துக்குடியில் அவர் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இந்த விடயம் தொடர்பாக தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஒரு போர்வையாக பயன்படுத்தி தொடர்ந்து மக்களை, எதிர்க்கட்சிகள் தூண்டிவிட்டு வருகின்றன.

குடியுரிமை திருத்தச் சட்டம் தொடர்பாக இலங்கை அகதிகளுக்கு இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மாத்திரமே தமிழக அரசாங்கம் முன்வைத்துள்ளது. அதைத்தவிர வேறு எந்த கோரிக்கையையும் வைக்கவில்லை.

எனவே இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது தொடர்பாக இந்திய அரசாங்கம் பரிசீலிக்கும். இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் இந்திய மத்திய அரசாங்கம் கலந்துரையாடி தீர்வு காணும்" என எச்.ராஜா தெரிவித்தார். (ஐ-2)

# கடற்கரை அபிவிருத்தித் திட்டத்தை ஜனாதிபதி கோட்டா பார்வையிட்டார்



(களுத்துறை)

களுத்துறை வடக்கு கெலிடோ கடற்கரை அபிவிருத்தித் திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பார்வையிட்டார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு திரும்பிச் செல்லும் வழியில் ஜனாதிபதி இந்தக் கடற்கரைக்குச் சென்றார்.

2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் இப்பகுதியிலுள்ள மணல்மேடு மண்ணரிப்புக்கு உட்பட்டதால் பாதிக்கப்பட்டது. இதற்குத் தீர்வாக ஆழ்கடலிலிருந்து மணலைப் பெற்றுக் கடற்கரையைப் பாதுகாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.


மூன்று கட்டங்களைக்கொண்ட இத்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் 2 கிலோமீற்றர் நீளமும் 25 மீற்றர் அகலமும் கொண்ட செயற்கை கடற்கரை நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற் காக மூன்று இலட்சம் மீற்றர் கியூப் மணல் பயன்படுத்தப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியளவில் இந்த மூன்று கட்டங்களினதும் பணிகளை நிறைவு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், களுத்துறையை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த ஜனாதிபதி, மொரட்டுவை பாணந்துறையை அண்மித்த நாளாந்த நகர சுத்திகரிப்பு நடவடிக்கைகளையும் பார்வையிட்டார். (இ-7)

# நைல் நதியில் நிறுத்தியுள்ள கப்பலில் 45 பேருக்கு கொரோனா



(கெய்ரோ)

எகிப்தில் நைல் நதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சொகுசுக் கப்பலில் கொரோனா வைரஸாஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 45ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஏ சாரா என்ற சொகுசுக் கப்பலில் நைல் நதிக்கு சுற்றுலா சென்ற போது. அந்த கப்பலில் இருந்த வெளிநாட்டவர்கள் பலருக்கும் கெரோனா பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து. கப்பல் நைல் நதியிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் மேலும் இரண்டு நாட்களுக்காவது இந்த கப்பல் தனிமைப்படுத்தப்படும் என்று அதிகாரிகள் தெரி விக்கின்றனர். கொரோனா வைரஸிலிருந்து எகிப்து தனது முதல் உயிரிழப்பை ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. 60 வயதான ஜேர்மன் சுற்றுலாப் பயணி, ஏழு நாட்களுக்கு முன்பு நாட்டிற்கு வந்து செங்கடல் ரிசார்ட்டில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அவரே உயிரிழந்ததாகவும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர், எகிப்து வைரஸின் மூன்று உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்வுகளை மட்டுமே அறிவித்தது. கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகுதியில், சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நான்கு வெளி நாட்டினர் மற்றும் மூன்று எகிப்தியர்கள் அடங்கலாக ஏழு பேர் புதிதாக கொரோனா வைரஸால் பதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சொகுசு கப்பலில், 101 பயணிகள் மற்றும் 70 பணியாளர்கள் உட்பட மொத்தம் 171 பேர் உள்ளனர். கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 19 பேர் வெளிநாட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கடலாமை பாதுகாப்புத் திட்டம்; 70 கடலாமை குஞ்சுகள் கடலுக்குள்



(கொழும்பு)

இலங்கை கடற்படை கடலாமை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்கின்ற தென்கிழக்கு கடற்படை கட்டளையின் பாணம கடலாமை பாதுகாப்பு மையம் மூலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 70 கடலாமை குஞ்சுகள் கடலுக்கு விடுவிக்கப்பட்டன. தற்போதைய கடற்படைத் தளபதியும் கடல் மற்றும் சுற்றுச்சூழல் நட்பு திட்டக் குழுவின் தலைவருமான வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவின் வழிகாட்டுதலின் கீழ், ஆபத்தான கடலாமை இனங்களைப் பாதுகாத்தல் மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்பின் பல்லுயிரியலைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் முதன்மை நோக்கத்துடன் கடற்படை பல கடலாமை பாதுகாப்பு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, தென்கிழக்கு கடற்படை கட்டளையின் பாணம கடலாமை பாதுகாப்பு மையத்தில் பாதுகாக்கப்பட்ட கடலாமை முட்டைகளினால் வெளியே வந்த 70 கடலாமை குஞ்சுகள் கடலுக்குள் விடும் நடவடிக்கை தென்கிழக்கு கடற்படை கட்டளையின் துணை தளபதி ரியர் அட்மிரல் நெவில்லே உபய சிறிகேவின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டது. (இ-7)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

திருகோணமலைதலைமையக பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மஹமாயபுரவில் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். திருகோணமலை தலைமையக பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் கைது இடம்பெற்றதாகக் குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்த 6 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர் 31 வயதுடையவர் எனவும் கைது செய்யப்பட்டவரின் வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரின் காரினுள் வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# செயற்குழுக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தின் கலை பண்பாட்டுப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் சுபாசினி மதியழகன் தலைமையில் இடம்பெறும். இக்கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10-134)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1998


### துர்க்கா

அடிமுடி தேடினாலும் அகராதியைப் புரட்டினாலும் முழுமையான அர்த்தம் அறிய முடியாத உயிர்ச் சித்திரம் அம்மா



### தர்மினி

பயணம் இன்றி வாழ்க்கையும் இல்லை, பணம் இன்றி உறவுகளும் இல்லை



### ராகேஷ்

காலமும் நேரமும் கூடிவரும்போது எதிர்பார்த்ததும் நடக்கலாம், எதிர்பாராததும் நடக்கலாம் அது காலத்தின் கட்டாயம், எது நடக்குமோ அது நடந்தே தீரும்




### ரவிசங்கர்

பிரச்சினையே இல்லாத ஒரு வாழ்க்கை என்றால் அது மரணம் தான்! தடைகளை எதிர்கொண்டு அவற்றை அடக்கி அவற்றின் மீதேறி சவாரி செய்வதுதான் மனிதனுக்குப் பெருமை




### றுசாந்த்

வயதான பெற்றோருக்கு அவர்கள் கேட்கும் முன் உணவு கொடுங்கள்... ஏனெனில் அவர்களும் குழந்தைகளே



### அச்சுதன்

பார்க்கக் கண்களைக் கொடுத்த ஆண்டவன் பாராதிருக்க இமைகளையும் கொடுத்திருக்கிறான். இரண்டையும் சரியான சமயத்தில் பயன்படுத்துபவனே புத்திசாலி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழர்களின் ஜனநாயக பலத்தை சிதறடிக்க சதி முயற்சிகள்

## அரசு மீது சிறிநேசன் குற்றச்சாட்டு

**(கொழும்பு) புதிதாக ஆட்சிப்பீடம் ஏறியிருக்கின்ற அரசாங்கம் வடக்கு- கிழக்கில் இம்முறை பொதுத் தேர்தலில் சில்லறைத்தனமான முறையில் பல கட்சிகளை உருவாக்கி தமிழ் மக்களின் வாக்குகளை உடைத்து சின்னாபின்னமாக்கி தமிழர்களின் ஜனநாயக பலத்தை சிதறடிக்கும் சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் குற்றம்சாட்டினார்.**



இந்த அரசாங்கத்தின் போக்குகளை நாங்கள் பார்க்கின்ற போது இந்த நாட்டில் சிறுபான்மை இனம் இருக்கின்றது என்பதனை மறந்து செயற்படுகின்ற தன்மையினை நாங்கள் அவதானித்துக் கொண்டு இருக்கின்றோம். தமிழ் இனத்தில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரையும் மண்ணுக்குள்தான் தேடிப் பார்க்க வேண்டும் என பரிகாசம் செய்யுமளவிற்கு எமது நிலைப்பாடானது தற்போது தள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். களுவாஞ்சிகுடி இளைஞர் முன்னேற்ற விளையாட்டுக் கழகத்தின் முப்பத்தி எட்டாவது வருடாந்த விளையாட்டு விழா களுவாஞ்சிகுடி பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நாட்டின் ஜனாதிபதி பெரும்பான்மை இனமான பௌத்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவராக தன்னை சித்தரித்து வருகின்றார். அதற்கமையவே தான் செயற்பட போவதாகவும் கூறிவருகின்றார். தற்போது நடைபெறவிருக்கும் தேர்தலில் தனது கட்சியானது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் போட்டியிடாமல் இருப்பதாகவும் கூறிவருகின்றார். இதனைப் பார்க்கின்ற பொழுது வடக்கு-கிழக்கு மக்களின் வாக்குகள் தனக்கு தேவையில்லை போன்று அவர்களின் நிலைப்பாடு இருப்பதனை நாங்கள் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. இம்முறை பொதுத் தேர்தலில் சில்லறைத்தனமான முறையில் பல கட்சிகளை உருவாக்கி தமிழ் மக்களின் வாக்குகளை உடைத்து சின் னாபின்னமாக்கி தமிழர்களின் ஜனநாயக பலத்தினை சிதறடிக்கும் சதி முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. எனவே இந்த அரசாங்கத்தின் போக்கினை ஒரு வகையில் திசைப்படுத்த வேண்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணைகளை ஏற்றுக் கொண்டால் இந்த அரசாங்கம் கடந்த காலங்களில் ஏற்பட்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக பொறுப்புக் கூற வேண்டும். தேசிய நல் லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். மனித உரிமையை நிலை நாட்டல் போன்ற பல விடயங்களை ஏற்படுத்த வேண்டும். ஆனால் தற்போது அரசாங்கம் இந்த விடயங்களில் இருந்து வெளியேறியுள்ளது என்றால் குறித்த விடயங்களில் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தப் போவதில்லை என்பது புலனாகியுள்ளது. எனவே தமிழ் மக்கள் இந்த விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் இந்த விடயத்தில் ஆழமாக சிந்தித்து தமிழ் தேசிய கட்சியின் பால் சிந்தித்து சரியான முடிவை நீங்கள் எடுக்க வேண்டும். முக்கியமாக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் காணாமல் ஆக் கப்பட்டோர் சம்பந்தமான விடயங்களை கையாள்வதற்கு செயலகம் அமைக்கப்பட்டது. இழப் பீட்டுக்கான அலுவலகம் அமை க்கப்பட்டது. அதே போன்று அபிவிருத்தி திட்டங்களாக வீதி அபிவிருத்தி திட்டம், கம்பெரலிய திட்டம், வீடமைப்புத் திட்டம், குடிநீர் திட்டம் போன்ற பல திட்டங்கள் கடந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கத்தில் அவையனைத்தும் பேச்சளவில்தான் உள்ளது. ஒரு இலட்சம் பேருக்கு வே லை வாய்ப்பு, பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு என்பன வற்றினை குறிப்பிடலாம். எனவே எமது மக்கள் ஏமாற்றுப்படக் கூடாது. இந்த அரசாங்கம் எமது மக்களை ஏமாற்றம் செய்கின்ற கைங்கரியத்தை மேற்கொண்டு வருகின்றது. மக்கள் இந்த விடயங்களில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். தென் பகுதியில் பெரும்பான்மை மக்கள் ஒன்றுபட்டுள்ளனர், முஸ்லிம் மக்களும் ஒன்றுபட்டுள்ளனர். அதே போன்று தமிழ் மக்களும் ஒன்று பட்டு செயற்பட வேண்டும். சர்வதேச ரீதியாக மனித உரிமை ஆணையாளர் தெளிவாக கூறியிருக்கின்றார். தமிழ் மக்கள் விடயத்தில் இந்த அரசாங்கம் பொறுப்பு கூறல், நல்லிணக்கம், மனித உரிமை போன்ற விடயங்க ளில் தவறி ழைத்துள்ளது என்று கூறியி ருக் கின்றார். இதனூடாக இந்த அரசாங்கம் தவறிழைத்துள்ளது என்பதனை சர்வதேச சமூகம் நன்கு உணர்ந்துள்ளது. இதற்கமைய நாங்கள் செயற்பட வேண்டும். இந்த தேர்தலில் இந்த அரசாங்கம் சார்பான பல கட்சிகளுக்கு நீங்கள் பதிலடி கொடுக்க வேண்டும் என்பதை நான் இந்த இடத்தில் கூறிவைக்க விரும்பு கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## செய்தித்துளிகள்

### ஆட்டோ மோதி ஒருவர் உயிரிழப்பு

(ஹபரதுவ)

ஹபரதுவ, கல்கெட்டிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்தார்.

காலியில் இருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த ஆட்டோ ஒன்று பாதசாரி ஒருவரை மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் பலத்த காயமடைந்த நபர் கராபிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உணவட்டுன பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் ஹபரதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

### சட்டவிரோத துப்பாக்கியுடன் அநுராதபுரத்தில் ஒருவர் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த பெண் கைது செய்யப்பட்டார் என்றும் அவரிடம் இருந்து துப்பாக்கி ஒன்றும் மற்றும் போரா 12 வகை தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட குறித்த பெண் மேலதிக விசாரணைகளுக்காக அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (இ-2)

### புத்தகயா யாத்திரை தற்காலிகமாக நிறுத்தம்

(பீகார்)

"தம்பதிவ" யாத்திரை என அழைக்கப்படும் புத்தகயா செல்லும் புனித யாத்திரைக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டது. புத்த சாசன அமைச்சால் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டது. கௌதம புத்தரின் பிறந்த இடமான இந்தியாவிலுள்ள லும்பினி மற்றும் புத்தர் பரிநிர்வாணமடைந்த புத்தகயா உள்ளிட்ட பிரதேசங்களைத் தரிசிக்கும் இந்த யாத்திரை இடம்பெறும் காலமாக இக்காலப்பகுதி அமைந்துள்ளது.

இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ளும் நிலையில், கொரோனா வைரஸ் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தம்பதிவ யாத்திரைக்கு தற்காலிகமாக தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக, பந்துல ஹரிஷ்சந்திர தெரிவித்தார்.

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் புத்தகயா அமைந்துள்ளது. (ஜ)


### சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 140 |
| தக்காளி | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 100 |
| கோவா | 100 | 100 | 100 |
| கரட் | 140 | 180 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 |
| புடோல் | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 60 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 160 |
| பாகற்காய் | 180 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 200 | 200 |
| பீற்றூட் | 50 | 80 | 80 |
| கறிமிளகாய் | 140 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 |
| போஞ்சி | 140 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | — | 60 |
| கீரை-1பிடி | 20 | 50 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 65 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 180 | 150 |
| வெங்காயப்பூ | 140 | 140 | 120 |
| முள்ளங்கி | 20 | — | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — |



# சிறுவர் அரங்கம்

## உழைப்பே உயர்வு தரும்



ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தறுவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதை பற்றி கவலையாக இருந்தார். ஒருநாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார். தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். அதுமட்டுமல்லாமல், அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டு இறந்து போனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின், அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை. ஒருவேளை, அப்பா "இரண்டடி" என்று சொல்வதற்கு பதிலாக "ஓரடி" என்று சொல்லிவிட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டு பிடித்து விட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

"இவ்வளவு தூரம் வந்தபின் எப்படி விட முடியும்" என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே!

அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் "சரி.. தோண்டியது வீணாக வேண்டாம்" என்று எண்ணி, அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள்.

உழைப்பு வீண் போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை இலாபம்.

இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.

**நீதி : உழைப்பால் வரும் பயனைத்தான் மிகப்பெரிய புதையல்**

## விடுகதைகளும் விடைகளும்

• பச்சை பச்சை டாக் டாக். பால் பால் டாக் டாக். குண்டு சட்டி டாக் டாக். குதிரை வாலு டாக் டாக்.

**வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை**

• காட்டுக்குப் போனேன் இரண்டு விறகு கொண்டு வந்தேன். பகலிலே ஒன்று. இரவிலே ஒன்று எரித்தேன்.

**சூரியன், சந்திரன்**

• கடகடா குடு குடு நடுவிலே பள்ளம்.

**ஆட்டுக் கல்**

• ஆழக் குழி தோண்டி, அதில் ஒரு முட்டையிட்டு, அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை.

**இளநீர்**

• இத்துனூண்டு சிட்டுக் குருவி. இழுத்து இழுத்து முள் அடைக்குது.

**ஊசி, நூல்**

• அஞ்சு விரல் அமர்ந்தாட, பத்து விரல் பந்தாட, சூரியனுடன் வாதாட, எமனுடன் போராட - அது என்ன?

**வரட்டி**

• தன்னைத் தானே பலிகொடுப்பான் பிறருக்கு ஒளி கொடுப்பான்.

**மெழுகுவர்த்தி**

• கடையிலே விற்கிற சாமான்களில், அத்தை ஒன்று, ஆணி ஒன்று.

**சித்திரத்தை, சாம்பிராணி**

• சாம்பலாண்டியும் சந்தைக்கு வந்தான் உச்சிக் குடுமியும் சந்தைக்கு வந்தான் ஒரு முதுகெலும்பனும் சந்தைக்கு வந்தான்.

**பூசணிக்காய், தேங்காய், வாழை இலை**


• கழுத்து உண்டு தலை இல்லை:உடல் உண்டு உயிர் இல்லை. கையுண்டு விரல் இல்லை.

**சட்டை**


## பொன்மொழிகள்

**மின்மினிப்பூச்சி எவ்வளவு ஒளியுடன் திகழ்ந்தாலும் அது தீ ஆகாது.**


**-சாணக்கியர்**



## வரைக



## வழிகாட்டுங்கள்



மரியாதையாய் கேட்டால்
கோட்டைகளும் உனக்கு
வழிவிடும் – செனிகா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk


## பொய்ப் பிரசாரம் செய்பவர்கள் கூசாமல் மக்களை ஏமாற்றுவர்

பாவ பழிக்கு அஞ்ச வேண்டும் என்பதுதான் மானிட தத்துவம். கடவுள் இருக்கிறான். அவன் அனைத்துக் கருமங்களையும் கண்காணித்துக் கொள்கிறான்.

எனவே பாவம் செய்யாமல் இருக்க வேண்டும் என எவன் நினைக்கிறானோ அவன் ஒரு போதும் பாவம் செய்யத் தலைப்படான்.

இதை மீறியும் ஒருவன் பழி செய்ய நினைப்பானாயின் அவனை இந்த இயற்கை தண்டித்தே ஆகும்.

இப்போது தேர்தல் காலம். மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்கு அரசியல்வாதிகள் பெருவியூகம் அமைப்பர்.

இருந்தும் நேர்மையான அரசியல்வாதிகள் உண்மையை மட்டுமே உரைப்பர். அவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் பொய் கூறவோ மற்றவர்களை ஏமாற்றவோ அன்றி விசமத்தனமான பிரசாரங்கள் செய்யவோ முற்படமாட்டார்கள்.

இருந்தும் தேர்தலில் வெற்றி பெறுவதற்காகப் பொய்ப் பிரசாரம் செய்வது, இல்லாத கதைகளைக் கட்டி விடுவது, உட்கட்சிப்பூசல்களை ஏற்படுத்துவது என ஏகப்பட்ட நடவடிக்கைகளில் ஒரு தரப்பினர் ஈடுபடுவர்.

இவ்வாறு செய்வதன் மூலம் அதனை மக்கள் நம்புவர். இவ்வாறு நம்ப வைத்துவிட்டால், தேர்தல் வெற்றி தமக்காகி விடும் என்பது இத்தகையவர்களின் நினைப்பு.

பல சந்தர்ப்பங்களில் இத்தகைய சூழ்ச்சிகளும் கபடத்தனங்களும் வெற்றி பெறுகின்றன.

சுருங்கக்கூறின் தருமருடனான சூதாட்டத்தில் சகுனி சூழ்ச்சி செய்தே தருமரை வெல்கிறான். அந்த சூழ்ச்சித்தனமான வெற்றியே பாண்டவர்களைக் காட்டுக்கு அனுப்பிவைத்தது.

ஆக சூழ்ச்சிகள், கபடத்தனங்கள், அதர்மங்கள் வெற்றி பெறாது என்று கூறுவதெல்லாம் உடனடியானதன்று.

மாறாக தேர்தல் சூழ்ச்சிகள் மற்றும் பொய்த்தனமான பிரசாரங்கள் செய்தவர்கள் வெற்றி பெறவும் நல்லவர்கள் துன்பத்தை அனுபவிக்கவும் காரணமாகிறது.

தெய்வம் நின்றறுக்கும் என்பது ஏற்புடையதாயினும் நிகழ்கால செயற்பாட்டில் பொய்ப் பிரசாரங்கள் வெற்றி பெறுகின்றன என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

எனவே இத்தகைய மோசடிகளில் ஈடுபடுபவர்கள் பதவிக்கு வந்தால் மக்களையும் ஏமாற்றுவார்கள் என்பதுதான் உண்மை.

ஆக, இங்குதான் மக்கள் பொய்ப் பிரசாரம் எது, கபடத்தனம் எது என்பன தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும்.

இல்லையேல் பொய்ப் பிரசாரம் செய்பவர்கள் வெற்றி பெற நல்லவர்கள் தோல்வி கண்டு விடுவர்.

நல்லவர்களின் இத் தோல்வி அவர்களுக்கல்ல மக்களுக்கும் இனத்துக்குமே ஆபத்தாக அமையும் என்பதால் நின்று நிதானித்து மக்கள் செயற்பட வேண்டும்.

## பொதுத் தேர்தலுக்கு முன்னர்
# பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்ட முக்கிய குற்றவாளிகள் கைதாவார்கள்
### வெளிவிவகார அமைச்சர் தினேஸ்குணவர்த்தன

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறிகளில் மிகப்பெரிய ஊழல் மோசடிகளை செய்தவர்கள் இன்று தலைமறைவாகி வாழ்கின்றனர். எவ்வாறு இருப்பினும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் முக்கியமான சிலர் கைதாவார்கள் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அத்துடன் கடந்த ஐந்தாண்டு காலத்தில் அரசாங்கம் மிகப்பெரிய குற்றச்செயல்களை முன்னெடுத்துள்ளது. இதில் மத்திய வங்கி பிணைமுறி ஊழல் என்பது மிகப்பெரிய குற்றச்செயலாகும். இந்த குற்றத்துடன் தொடர்புபட்ட எவரையும் எமது அரசாங்கம் விட்டு வைக்காது. இப்போது ஒரு சிலர் மீதான பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிலர் தலைமறைவாகியுள்ளனர். இவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள். அதே போல் முக்கிய குற்றவாளிகள் சிலர் தேர்தலுக்கு முன்னர் கைதாவார்கள்.

நாட்டை விட்டு வெளியேறியுள்ள சிலர் மீதான தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்ட சிலர் கைதுசெய்யப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் தீவிர முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. எமது முயற்சிகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றதே தவிர எவரையும் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கம் எமக்கு இல்லை என்றும் அவர் கூறினார். (ம-3)

## டிப்பர் விபத்தில் சாரதி படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலை - மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் சந்தியில், டிப்பர் வாகனமொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பமொன்றில் மோதி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 04 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் தோப்பூர் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சாரதியொருவரே காயங்களுக்குள்ளாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூரிலிருந்து கங்கைப் பகுதிக்கு மணல் ஏற்றச் சென்ற குறித்த டிப்பர் வாகனம் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கத்தால் வேகக் கட்டுப்பாட்டையும் மீறி மின் கம்பத்தில் மோதியுள்ளது.

இதேவேளை, திருகோணமலை- கண்டி பிரதான வீதியின் 97ஆம் சந்திப் பகுதியில் பொலன்னறுவை நோக்கி மணல் ஏற்றிச்சென்ற டிப்பரொன்றும் நேற்று அதிகாலை குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே இந்த விபத்துக்குப் பிரதான காரணமென ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து அறிய முடிகின்றதென பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## புதுக்குடியிருப்பு இருட்டு மடுவில் இளைஞனை காணவில்லை
### பொலிஸில் முறைப்பாடு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இருட்டு மடுவில் வசித்து வந்த இளைஞன் ஒருவனை கடந்த நான்கு நாட்களாக காணவில்லை என புதுக் குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இருட்டுமடு உடையார் கட்டினை சேர்ந்த 20 அகவையுடைய பாக்கியராஜா விஜிதரன் என்ற இளைஞன் கடந்த 05.03.2020 அன்று வீட்டில் இருந்து வெளியில் சென்ற நிலையில் இதுவரை வீடு திரும்பாத நிலையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கடந்த 07 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவரை யாராவது கண்டால் இவரது தந்தையின் தொலைபேசிக்கு அறியத்தருமாறு தந்தை அறிவித்துள்ளார்.

தந்தை பாக்கியராஜ்- 0770373478

(ம-3,281)

## திருகோணமலை மாவட்ட
# பொது சுகாதார பரிசோதகர்கள் இன்று சுகவீன விடுமுறைப் போராட்டம்

கிழக்கு மாகாண சுகாதார பணிமனைக்கு உட்பட்ட திருகோணமலை மாவட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் இன்று சுகவீன விடுமுறை போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக அறிவித்துள்ளனர்.

இன்று காலை 7.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரையிலான காலப் பகுதியில் சுகவீனப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என திருகோணமலை மாவட்ட பொதுசுகாதார பரிசோதகர்களின் பொறுப்பாளர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்துக்குள் இடம்பெறும் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெறும் இடமாற்றக்கொள்கைக்கு எதிராக இடமாற்றங்கள் இடம்பெறுவதை தடைசெய்யக் கோரியே இன்று சுகவீனப் போராட்டத்தை முன்னெடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

திருகோணமலையில் உள்ள சுமார் 51 பொது சுகாதார பரிசோதகர்கள் சுகவீனப் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**அறிவு கல்வி கற்பதும் கற்பிப்பதும் மிகவும் முக்கியம். அதே நேரத்தில் குணத்தில் சிறந்த மனிதனை உருவாக்குவதாக அவை அமைய வேண்டும். -இந்திராகாந்தி**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, லிங் ரெடி மிக்ஸ் பிறைவேற் லிமிற்ரெட் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** முகத்தாங்குளம் 2ம் வட்டாரம், பகல அளுத்வத்த கிராமம், மதவு வைத்த குளம், குட்செட் வீதி, தோணிக்கல், பண்டாரிக்குளம், தவசிக்குளம், உக்குளாங் குளம், குளோப்மில் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** இசைமலைத்தாழ்வு, நரிக்காடு, நீலாமடுவிலிருந்து சிலாவத்துறையூடாக அரிப்பு வரை, கொக்குப் படையானிலிருந்து முள்ளிகுளம் வரை, முள்ளிக்குளம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## பலன் தரும் வழிபாடு



எங்கு நிறை பரப்பிரம்மம் பிரதிகை மூலமாக வழிபடப்படுகிறதோ அப்போது அந்த வழிபாடு நிச்சயமாக பயன் தருகிறது. அதுமட்டுமல்ல மனம் தொடக்க நிலை வழிபாட்டைக் கடந்து செல்லாத வரை மனித குலத்திற்கு இத்தகைய பிரதிகை வழிபாடு மிகத் தேவையானதாகும். தேவதைகளுக்கோ, பிற மக்களுக்கோ அல்லது தமக்காகவோ செய்யப்படுகிற வழிபாடு வெறும் சடங்கு மட்டுமே. அது வெறும் வித்தை மட்டுமே. என்றாலும் இந்த வழிபாடு அதற்குரிய பலனைக் கொடுக்கத்தான் செய்கிறது. ஆனால் இதே தேவதைகளையும் மற்றவர்களையும் பிரம்மமாக நினைத்து வழிபட்டால் இறைவனை நேரில் வழிபடுவதனால் வரும் பயன் கிடைக கிறது.

# தேசிய ரீதியில் சாதித்த மாணவிக்கு முன்னாள் அமைச்சர் றிசாத் பாராட்டு

கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் இம்மாதம் முதலாம் திகதி வரை வடமத்திய மாகாண விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உடைய 31ஆவது இளைஞர் விளையாட்டு விழாவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பங்குபற்றிய யுவதியான சசிகுமார் சரணியா 1500 மீற்றர் ஓட்டத்தில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தை பெற்று சாதனை படைத்தார்.

அந்த வகையிலே குறித்த யுவதியை கடந்த 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகை தந்த முன்னாள் அமைச்சரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய றிசாத் பதியுதீன் பணப்பரிசில்கள் வழங்கி கௌரவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படுகின்ற துணுக்காய் பிரதேசத்தில் யோகபுரம் மகா வித்தியாலயத்தின் மாணவியாகிய சசிகுமார் சரணியா இந்த போட்டியில் தேசிய ரீதியில் மூன்றாமிடம் பெற்று சாதித்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)



# பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி சங்கானை பிரதேச செயலக அணி சம்பியன்




யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களிற்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களிற்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ் .கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பளை பிரதேச செயலக அணி மோதியது. நான்கு கால்பகுதிகளாக நடைபெற்ற ஆட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணி முதலாவது கால் பகுதியாட்டத்தில் 14:8 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர். இதில் சங்கானை பிரதேச செயலக அணி 24:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்தது. ஆனால் மூன்றாவது கால் பகுதியில் மீண்டும் ஆதிக்கம் செலுத்திய சங்கானை பிரதேச செயலக அணி 35:28 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்தது. வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் நான்காவது கால்பகுதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலப்பரீட்சை நடத்தின. இதில் சங்கானை பிரதேச செயலக அணியினர் 43:41 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர். (க)

# பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டி சம்பியனானது நெல்லியடி மத்திய கல்லூரி அணி



வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 40 பந்துகளில்10 ஓட்டங்களை குவித்தனர். அவ்வணிசார்பாக கிசோக் 4 ஓட்டங்களைப்பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்கு 11 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய பருத்தித்துறை ஹாட்லி அணி 40 பந்துகளில் 4 ஓட்டங்களை மட்டும் பெற 6 ஓட்டங்களால் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

போட்டியின் 3 ஆம் இடத்தை அம்பன் அ..த.க பாடசாலை அணி பெற்றுக் கொண்டது. (க-60)



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஜேர்மன் வாழ் தாயக உறவுகளின் அனுசரணையில் நடத்திய படகுப் போட்டி வேலணை துறையூரில் கடந்த வெள்ளிக்கிழமை காலை சிறப்பாக நடத்தப்பட்டது. (படம்-செ.ரவிசாந்த்)

# வலய மட்ட பெண்கள் துடுப்பாட்டம் கரவெட்டி விக்னேஸ்வரா சம்பியன்



வலயமட்ட பெண்கள் துடுப்பாட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை வீழ்த்தி சம்பியன் ஆனது .கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி. 2020 ஆம் ஆண்டுக்கான வடமராட்சி வலய மட்ட பெண்கள் துடுப்பாட்டத்தின் இறுதியாட்டம் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற விக்னேஸ்வரா கல்லூரி அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி சார்பில் அதிகபட்சமாக விசாலினி 10, காவியா 7 ஓட்டங்களைப் பெற்று 47 ஓட்டங்களை சேகரித்து கொண்டனர்.

விக்னேஸ்வரா கல்லூரி சார்பில் மிக்சனா 3, மதுசியா, சாமினா, தர்ஷிகா 3, சாமானா, மதிய தர்சிகா தலா ஒரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

48 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வரா கல்லூரி இரண்டு பந்துப் பரிமாற்றங்கள் மீதம் இருக்கையில் இலக்கு இழப்பின்றி வெற்றி இலக்கை எட்டி 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று வடமராட்சி வலயமட்ட சம்பியனானது. துடுப்பாட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனைகள் சாதுரிய 30 ஓட்டங்களையும் நிருத்திக் 14 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக்கொண்டனர். (க)

# மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது உரும்பிராய் அண்ணா ஸ்டார் அணி




வல்வை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது உரும்பிராய் அண்ணா ஸ்டார் விளையாட்டுக்கழகம் மற்றும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம்.

வல்வை விளையாட்டுக்கழகம் தனது 60 ஆம் ஆண்டு வைர விழாவினை முன்னிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட தொடரானது வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

அந்தவகையில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் அண்ணா ஸ்டார் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து கரவைசுடர் அணியானது மோதியது. விறுவிறுப்பிற்கு பஞ்சமில்லாத இவ்வாட்டத்தில் உரும்பிராய் அண்ணா ஸ்டார் அணியானது 03:02என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது.

ஆட்டநாயகனாக உரும்பிராய் அண்ணா ஸ்டார் அணியைச் சேர்ந்த துஸ்யந்தன் தெரிவு செய்யப்பட்டார். அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி கனகபுரம் அணியினை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது. பரப்பான ஆட்டத்தில் 04:02 என்ற கோல்கணக்கில் நவிண்டில்கலைமதி அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக நவிண்டில் கலைமதி அணியின் சந்தோஸ் தெரிவுசெய்யப்பட்டார்.(க)

# காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் மரணம்

## குப்பிழானில் சம்பவம்

(குப்பிழான்)

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு யாழ்ப் பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த குப்பிழானைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

ஒரு வகையான காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் குறித்த குடும்பஸ்தர் கடந்த பல நாட்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந் துள்ளார். இந்நிலையில் அவருக்கு ஏற்பட்ட கிருமித் தொற்று நுரையீர லுக்கும் பரவிய நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

குப்பிழான் வடக்கைச் சேர்ந்த நவரத்தினம் வசீகரன் (வயது-35) என்ற இளம் குடும்பஸ்தரே இவ் வாறு மரணமானவராவார். (ம-18)

## அரசியலில்...

இவ்வாறு பிக்குகள் அரசியலில் ஈடுபடுவது புத்த சாசன, மதம், தர்மம் மற்றும் பௌத்த பரம்பரை யின் பெரும் சரிவுக்கு வழி ஏற்படுத்தி யுள்ளது என்றும் அவர்கள் தெரிவித் துள்ளனர்.

மார்ச் 12 அமைப்பின் பிரதி நிதிகள் திருத்தப்பட்ட மார்ச் 12 அறிக்கையினை மகாநாயக்கர் களுக்கு கையளித்த போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரி வித்தனர். (ம-3)

## ரணில் எங்களை...

நீங்கள் தெரியாமல். அவர் நியாய மாக செயற்படுவார் என நினைத் துக் கொண்டு போய்விட்டீர்கள் என சொல்கிறார்.

இது வெளியிலிருந்து வரும் விமர்சனம் மட்டுமல்ல. வீட்டுக் குள் இருந்தே இருக்கிறது. ரணில் ஏமாற்றியுமிருக்கலாம் என தெரி வித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந் திரன் யாழில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரை யாற்றிய போது இதனை தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், தமிழ் மக்கள் சஜித் பிரேம தாசவிற்கு வாக்களித்தனர். நாங் கள் சொல்லியா வாக்களித்தனர். இல்லையே. அது ஏற்கனவே எடுக் கப்பட்ட தீர்மானம். எமது மக்களுக்கு நன்றாக அரசியல் தெரியும் என் றார் சுமந்திரன். (ம)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1141
சீட்டிழுப்பு திகதி 09.03.2020 திங்கள்
F 03 22 32 62
5 5 8 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.99,477,432/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 907
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.03.09
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,608,700/-
வெற்றி இலக்கங்கள் 11 13 21 42 ஆங்கில எழுத்து L
தொலைபேசி: 0112 333 546-47 0114 825 825

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3311 திகதி: 2020.03.09
நீலம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 23 27 43 57 ஆங்கில எழுத்து W
அடுத்த திங்கட் கிழமை ஜக்பொட் 36,997,698.50
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 09.03.2020 வெற்றி வாரம் 2793 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் தனுசு 26 32 39 44
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,493,942
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 2 1 2 2
ரூ.100 பரிசுக்குரிய 7 6 4
10.03.2020 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## பட்டப்பகலில் திருட்டு கொள்ளையன்...

துரத்தியுள்ளார். கொள்ளையர் களில் ஒருவன் தப்பிச் சென்ற நிலை யில் மற்றைய கொள்ளையனைக் குறித்த குடும்பஸ்தர் தொடர்ந்தும் துரத்திச் சென்றுள்ளார்.

இந்நிலையில் வேறு விடயமாக மேற்படி கிராமத்திற்கு வந்த சுன்னாகம் பொலிஸ் நிலையப் புல னாய்வுப் பிரிவின் உத்தியோகத்த ரொருவரும், ஊர்மக்களும் இணை ந்து மிளகாய்த் தோட்டத் திற்குள் சென்று ஒளிந்து கொண்ட குறித்த கொள்ளையனை மடக்கிப் பிடித்த னர்.

இதன்போது அங்கு கூடிய சிலரால் குறித்த கொள்ளையன் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது. கொள்ளையிடப்பட்ட சில பொருட் களும் இதன்போது மீட்கப்பட்டுள் ளன. (ம-3.18)

## கட்டுப்பணம் செலுத்தியுள்ளது...

கட்டுப் பணம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் இதனை தெரி வித்தார்.

இதற்கமைய, கொழும்பு, கம் பஹா, களுத்துறை, நுவரெலியா, காலி மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து சுயேட்சைக்குழுக்கள் தமது கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளதாக அவர் குறிபிட்டுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி முதல் கட் டுப்பணம் செலுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 16 ஆம் திகதி நண் பகல் 12.00 மணியுடன் அது நிறை வடையவுள்ளது.

அதேநேரம், எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையில் வேட்பு மனு தாக்கல் செய்ய முடியும் என்வும் தேர்தல் கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-3)

## பேஸ்புக்கில் படங்களை பதிவிட...

இணைய மோசடியாளர்களி டம் இருந்து பெண்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் தெரி வித்துள்ளது.

வீட்டிலுள்ள இல்லத்தரசிகள் நாள் முழுவதும் இணையத்தளம் மற்றும் முகப்புத்தகத்தை பயன் படுத்துவதனால் மோசடியாளர்களிடம் சிக்குவது தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஆணையம் தெரிவித்துள்ளது.

தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்திடம் இதுவரை யில் கிடைத்துள்ள முறைப்பாடு களில் நூற்றுக்கு 50 வீதமான வைகள் அவ்வாறான முறைப்பாடு கள் என குறிப்பிடப்படுகின்றது.

இல்லத்தரசிகள் தங்கள் புகைப் படங்களை மோசடி நபர்களின் வட்ஸ்அப் மற்றும் முகப்புத்தகத்தில் அனுப்புவதனால் பணமோசடி மற்றும் பாலியல் ரீதியான அழுத் தங்கள் அதிகரித்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது. முகப்புத்தகம் ஊடாக அறிமுக மாகும் புதிய நண்பர்களுக்கு பெண்களின் தனிப்பட்ட புகைப் படங்கள் அனுப்பு வதனால் பிரச்சினைகள் ஏற்படு வதாக நூற்றுக்கு 30 வீதமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் தெரிவித்துள் ளது.

பெண்களில் பெரும்பாலானோர் தங்கள் கையடக்க தொலைபேசி ஊடாக இணையத்தளம் பயன் படுத்துவதனால் அதனை நூற் றுக்கு 98 வீதமானோராக கணக் கிடப்பட்டுள்ளது.

இதனால் முகப்புத்தகத்தில் அறியாத நண்பர்களுடன் எவ்வித கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ள வேண்டாம் என இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் பெண் களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன் தனியார் நிகழ்வுகள் மற்றும் உல்லாசப் பயணங்களின் புகைப்படங்களை முகப்புத்தகத் தில் பதிவிட வேண்டாம் என இலங்கையர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 18 பவுண் நகை...

கர் கோவிலடியிலுள்ள வீடொன றில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டிலுள்ள இருவரும் அரச உத்தியோகம் என்பதால் இரு வரும் வீட்டிலிருந்து வெளியே சென்ற வேளை உட்புகுந்த திருடர் கள் வீட்டின் உள் அறையில் வைக் கப்பட்டிருந்த சுமார் 18 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் 16 ஆயிரம் ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3.10)

## யாழில் இருவர்...

ரூபாய் பெறுமதியான வீடியோ கமரா ஒன்றும் பத்தாயிரம் ரூபாய் பணமும் வெளிநாட்டு நாணயங் களுடனும் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் இரு வரும் அரியாலை பகுதியைச் சேர்ந்த வர்கள் எனவும் குறித்த சந்தேக நபர்கள் பல்வேறுபட்ட திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு இருக் கலாம் என்ற சந்தேகத்தின் அடிப் படையில் விசாரணைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3.114)

## வெளிநாடுகளு...

பணிப்பாளர் நாயகம் அனில் யாசிங்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

குழுக்களாக செல்வதற்கு திட்ட மிடப்பட்டுள்ள அனைத்து வெளி நாட்டு பயணங்களையும் இரத்து செய்துகொள்ள வேண்டும் என்றும் பணிப்பாளர் நாயகம் அனில் யாசிங்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தம்பதிவ யாத் திரை பயணத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு புத்தசாசன அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் பயண ஏற்பாட்டாளர்கள் இருவர் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள் ளது. (ம-3)

வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
யாழ் மக்களின் அட்சயபாத்திரம் NLB யிடமிருந்து
மீண்டும் ஓர் லட்சாதிபதி.......
எமது விற்பனையில் 29.02.2020 சனிக்கிழமை
ஜாதிக சம்பத ஆறு இலக்கங்களும் (152201) பொருந்தியதில்
இருபது இலட்சம்
2,000,000
வெல்லப்பட்டுள்ளது.
சுன்னாகத்தைச் சேர்ந்த வெற்றியாளருக்கு எமது வாழ்த்துக்கள்
எமது விற்பனையில் கடந்த 28.12.2019 ஜாதிக சம்பத ரூபா இருபது இலட்சம் வெல்லப்பட்டது. எமது விற்பனையில் 29.12.2017 மகாஜன சம்பத ரூபா இருபது இலட்சம் வெல்லப்பட்டது.
N689938
ஒன்றாவது வாங்குவோம் என்றாவது வெல்வோம்
நடராஜா வசீகர், சுன்னாகம். N220063
08.03.2020 அன்று பிரசுரமான NLB ஜாதிக சம்பத அதிர்ஷ்ட முடிவு தவறாக பிரசுரிக்கப்பட்டுவிட்டது. தற்பொழுது சரியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.
(C-9431)

## இலங்கை...

கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் நோக் கிலேயே கட்டார் அரசு இந்த நடவடிக் கையை எடுத்துள் ளது.

இலங்கை, சீனா, எகிப்து, இந்தியா, ஈரான், லெபனான், பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ் தான், பிலிப்பைன்ஸ், தென் கொரியா, சிரியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து வரும் பய ணிகளுக்கே கட் டார் தற்காலிக தடை யை விதித்துள் ளது. (ம-3)

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/03/09
சீட்டிழுப்பு இலக்கம் 1511
04 18 27 42 57 25 59

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 09-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2416
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 08 33 41 62

மெகா பவர்
திகதி 09/03/2020
சீட்டிழுப்பு இலக்கம் 508
Q 18 24 54 56 65

மஹஜன சம்பத
திகதி 2020/03/09
சீட்டிழுப்பு இலக்கம் 4131
ஆங்கில எழுத்து W
வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 4 4 3 9 6

### நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம்

# பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி தன்னகத்தே கொண்டிருக்க முடியாது

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா



**(கொழும்பு) அரசியலமைப்பின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சை தன்னகத்தே கொண்டிருக்க முடியாத ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எவ்வாறு பாதுகாப்பு துறையினருக்கு கட்டளையிட முடியும் என்று கேள்வியெழுப்பிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்களைப் போன்று மீண்டுமொரு சம்பவம் இடம்பெற்றால் நாட்டில் பொறுப்புக்கூறுவதற்கு யாரும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.**

மீரிகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றி விசாரணைகளை முன்னெடுப்பதற்கு பாராளுமன்றத்தில் தெரிவுக்குழு நியமிக்கப் பட்டது. நானும் அதில் அங்கத்துவம் வகித்த போதிலும், 68 பக்கங்களில் நான் தனியாக ஒரு அறிக்கை தயாரித்திருக்கிறேன்.

அதில் முதலாவது குற்றவாளியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் இரண்டாவது குற்றவாளியாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் மூன்றாவது குற்றவாளியாக நீதித்துறை அமைச்சரையும் நான்காவது குற்றவாளியாக முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவையும் குறிப்பிட்டிருக்கிறேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் இலங்கையை சிங்கள பௌத்த நாடு அல்ல என்று ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்துவம் வகித்த சிலர் வெளியிட்ட கருத்துக்கள் என்பனவே ஜனாதிபதித் தேர்தலில் நாம் தோல்வியடைக் காரணமாக அமைந்தது.

இறுதி நேரத்தில் இவ்வாறு நடைபெற்றாலும் 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்து 100 நாட்களில் நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் வியத்மக அமைப்பினரால் எழுதிக் கொடுக்கப்பட்ட குறிப்புக்களை வாசித்தமையால் அவருக்கு வழங்கிய வாக் குறுதிகள் கூட நினைவில் இல்லை.

எனவே சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்றும் கூறினார். (ம-3)


**அறை வாடகைக்கு**

படிக்கும் மாணவிகள், பெண் உத்தியோகத்தர்களுக்கு நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பான சூழலில் அறை வாடகைக்கு உண்டு. தேவைப்படின் சாப்பாடு வசதியும் செய்து கொடுக்கப்படும். (2551)

தொடர்புகளுக்கு: 0772735406

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



UK-550*/=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது) (C-9381)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240 V2 TRAVELS

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

A/L 2020 தொழினுட்ப மாணவர்களுக்கான

**விசேட வினாத்தாள் வகுப்புக்கள்**

**ஆரம்பமாகிவிட்டது**

பொறியியல் தொழினுட்பவியல்

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்

கணிதம் | விவசாய விஞ்ஞானம்

புவியியல் | ஊடகக்கல்வி

வாரத்தில் ஏழு நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்

Past papers

Model Papers

அலகுரீதியான எதிர் பார்க்கை வினாக்கள்

புதிய அலகுரீதிகள் வழங்கப்படும்

077 248 7774 / 021 221 7860 (C-9457)

**முகாமைத்துவ உதவியாளர் தேவை**

20 - 30 வயதுக்குட்பட்ட O/L தகைமை உடைய யாழ்.நகருக்கு 5 KM சுற்றுவட்டாரத்துக்குள் வசிக்கும் ஆர்வமுடைய பெண்கள் இன்று (10.03.2020) மாலை 4 மணிக்கு சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

ஐரோப்பிய மொழிக் கல்லூரி

இல.19, பலாலி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

0769370456 (C-9460)

**மணமகன் தேவை**

1990 மூல நட்சத்திரம் 4ம் பாதம் 38½ கிரக பாவம் 7இல் செவ்வாய் உடைய யாழ்.இந்து விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு மணமகனை எதிர்பார்க்கின்றோம். ஐரோப்பிய நாடுகள் விரும்பத்தக்கது. (2544)

T.P:- 0773325768

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (2490)



**சாவகச்சேரியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



076 443 1576

**அருள்**

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9381)

**English**

Diploma / Spoken Eng

**British college**

of higher studies

0212224550 / 0761380212

Sirampiyady lane, Stanley road, Jaffna (C-9709)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**

➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே

➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)

➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (2507)



021 222 8093 புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna.


FWC

## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2020

மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22.03.2020 ஞாயிற்றுக்கிழமை தொண்டைமானாறிலுள்ள வெளிக்கள நிலையத்தில் காலை 10.00 மணிக்கு நடை பெறவுள்ளது.

அங்கத்தவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்
தொண்டைமானாறு. (2550)

இ.குகானந்தன்
(செயலாளர்)





விலை 790/-

தனிப்பிரதி தேவையானோர் தொடர்பு கொள்ளவும். அனுப்பி வைக்கப்படும்.

**விற்பனையாகின்றது**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கான

**விவேக கணித வழிகாட்டி**

புலமைப்பரிசில் பரீட்சையில் (பகுதி 1, பகுதி 2) 130 புள்ளிகளை இலகுவாக பெற்றுக்கொள்ள, 1900 ற்கும் மேற்பட்ட வினாக்களும் விடைகளும் அடங்கியது.

எல்லா புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆக்கம் : ஆசிரியர் G. மோகன்ராஜ்
(ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர், கொத்மலை கல்வி வலயம்)

எமது வெளியீடு :

மாணவர்களுக்கான அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் முதன்மை நிலை 01 (தரம் 1, 2) முதன்மை நிலை 02 (தரம் 3, 4), முதன்மை நிலை 03 (தரம் 5)

வெளியீடு : **யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்,**

இல. 10 - 1/5, *(No. 342, Trust Complex, Sea Street)* முதலாம் மாடி, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு - 13. தொலைபேசி : 077 - 6258778 (C-9450)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.